# நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி 2018

## ஜனவரி 1-5

### தேசம்

**தூய்மை இந்தியா இயக்கம் (Swachh Bharat Mission)** - அனைவருக்கும் கழிப்பறை வசதிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், துப்புரவு குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகவும் அக்டோபர் 2014ல் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் நோக்கம், மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தினத்தை ஒட்டி, அவருக்கு பொருத்தமாக நன்றி தெரிவிக்கும் பொருட்டு, தூய்மை இந்தியாவை அடைய வேண்டும் அல்லது 2019 வாக்கில் இந்தியாவை தூய்மையான நாடாக மாற்றுவது என்பதாகும்.

**தூய்மை சர்வே (Swachh Survekshan) 2018**

- இந்த தூய்மை சர்வே 2018ஆனது, தேசிய அளவில் ஒரு லட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட 500 நகரங்களை தர வரிசைப்படுத்தும். அதே சமயம், 1 இலட்சம் மக்கள் தொகைக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 3,541 நகரங்கள் மாநில மற்றும் பிராந்திய தர வரிசைப் பட்டியலைக் கொண்டிருக்கும்.
- 2017 பதிப்பு ஜனவரி - பிப்ரவரி 2017ல் 434 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடத்தப்பட்டது. இந்த சர்வேயின்படி இந்தூர் மிகவும் தூய்மையான நகரமாக அறியப்பட்டது.

**முதலாவது டிஜிட்டல் ஆன்லைன் புற்றுநோய் இயல் பயிற்சி**

- சுகாதார அமைச்சகத்துடன் இணைந்து டாடா நினைவு மையத்தால் வடிவமைக்கப்பட்டது.
- பல்வேறு புற்று நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிதல், தடுத்தல், கடுமை தணிப்பு, மறுவாழ்வு மற்றும் சிகிச்சை ஆகியவை குறித்து நாடு

முழுவதிலும் உள்ள மருத்துவர்களுக்கு பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது.

- இது, மாநில அரசுகளுடன் இணைந்து டாடா நினைவு மையம் நாடு முழுவதிலும் நடத்த உள்ள தேசிய திட்டத்தின் ஒரு பகுதியே ஆகும்.

## பிரதமரின் ஆரோக்கிய பாதுகாப்புத் திட்டம் (Pradhan Mantri Swasthya Suraksha Yojana)

- 2003ல் அறிவிக்கப்பட்டது.
- இதன் நோக்கங்கள், நாட்டில் குறைந்த கட்டணத்தில் / நம்பிக்கைக்கு உரிய மூன்றாம் நிலை சுகாதாரச் சேவைகள் கிடைப்பதில் நிலவும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைச் சரி செய்தல் மற்றும் தரமான மருத்துவக் கல்வி கிடைப்பதற்காக வசதிகளை அதிகரிக்கச் செய்தல் என்பதாகும்.
- இந்தத் திட்டம் இந்தியாவின் பல்வேறு பிராந்தியங்களில் பல்வேறு மருத்துவக் கல்லூரிகள் அல்லாமல், அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனங்களையும் நிறுவுகிறது.
- இந்தத் திட்டத்திற்கு சுகாதாரம் குறித்த கட்டமைப்பை ஏற்படுத்துதல் தொடர்புடைய பல்வேறு மத்திய அரசு உதவித் திட்டங்களில் இருந்து நிதி கிடைக்கிறது.

## தூய்மை கங்காவுக்கான தேசிய இயக்கம் (National Mission for Clean Ganga) ரூ.295.01 கோடி மதிப்பிலான 5 திட்டங்களை அங்கீகரித்துள்ளது.

- இரண்டு திட்டங்கள் ரூ.278.6 கோடி மதிப்பில் மேற்கு வங்காளத்தில் மேற்கொள்ளப்படும் கழிவு நீர் மேலாண்மை தொடர்பானவை ஆகும். ஒரு திட்டம் ரூ.4.68 கோடி மதிப்பில் உத்தராகண்ட் மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் கழிவு நீர் மேலாண்மை தொடர்பானது ஆகும். ஐந்தாவது திட்டம் வாரணாசியில் மலைத் தொடர்களை மேம்படுத்துவது தொடர்பான ரூ.11.73 கோடி மதிப்பிலான திட்டம் ஆகும்.
- இந்தத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, கங்கை ஆற்றின் கரையோரம் அமைந்துள்ள அதிக மாசுபட்டுள்ள நகரங்களில் கழிவுநீர் மேலாண்மை தொடர்புடைய அனைத்துத் திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திற்கும்

**தீனதயாள் மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வுத் திட்டம்** - மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வு தொடர்புடைய பல்வேறு திட்டங்களுக்காக அரசு சாரா அமைப்புகளுக்கு இந்தத் திட்டம் நிதி வழங்குகிறது. இந்தத் திட்டத்தின் நோக்கம் உடல் குறைபாடு கொண்ட நபர்கள் தங்களது அதிகபட்ச, செயல்,

 PH: 24339436, 42867555, 9840226187

உணர்வு, அறிவுபூர்வ, உளநல அல்லது சமூக செயல்பாட்டு நிலைகளை அடைவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து பராமரிக்கச் செய்வதே ஆகும்.

**“நரி (NARI)” ஆன்லைன் போர்ட்டல்**

- பெண்கள் மற்றும் குழந்தைகள் அபிவிருத்தி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது.
- இந்தப் போர்ட்டலானது பெண் குடிமக்களுக்கு அரசின் திட்டங்கள் மற்றும் பெண்களுக்கான முனைப்புகள் தொடர்பான தகவல்கள் எளிதில் கிடைக்கச் செய்வதே ஆகும்.
- இந்த “நரி” போர்ட்டலானது பெண்களின் பயன்பாட்டிற்கான 350க்கும் மேலான அரசு திட்டங்கள் மற்றும் இதர முக்கியமான தகவல்களை சுருக்கமாக வழங்குகிறது. இந்தப் பட்டியலில் தினமும் அதிக எண்ணிக்கையிலான திட்டங்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன.

**இ-சம்வாத் போர்ட்டல்** - இது, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்துடன் அரசு சாரா அமைப்புகள் மற்றும் குடிமைச் சமூகத்தினர் பரிமாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு மேடை ஆகும்.

இந்திய அரசு, குடியுரிமை பெற்ற குடிமக்கள் / இந்து பிரிவினை செய்யப்படாத குடும்பத்தினர் எந்தவித நிதி உச்ச வரம்பும் இன்றி வரி விதிப்பு பத்திரங்களில் முதலீடு செய்ய ஏதுவாக, 7.75 விழுக்காடு சேமிப்பு (வரிவிதிப்பு) பத்திரங்கள் 2018 விற்பனையை 10 ஜனவரி 2018 முதல் தொடங்கப்போவதாக அறிவித்துள்ளது.

ஜிஎஸ்டிக்கு பிந்தைய இழப்புகளை ஈடு செய்வதற்காக மத்திய அரசு ரூ.24,500 கோடியை மாநிலங்களுக்கு விடுவித்துள்ளது. நவம்பர் 30 அன்றுள்ளபடி, மாநிலங்களுக்கு விடுவிக்கப்பட்ட ஜிஎஸ்டி ஈட்டுத் தொகை பற்றிய விவரங்களின் அடிப்படையில் கர்நாடக மாநிலம் மத்திய அரசிடமிருந்து அதிகபட்சமாக ரூ.3,271 கோடியைப் பெற்றுள்ளது. அதற்கு அடுத்த இடத்தை குஜராத்தும் பஞ்சாப்பும் பெற்றுள்ளன.

ஆசியாவின் மிகப்பெரிய இருவழி ஜோஜிலா கடந்து செல்லும் சுரங்கப் பாதையை (14.2 கிமீ சுரங்கப்பாதைத் திட்டம்) ரூ.6,089 கோடி மதிப்பில் கட்டுவதற்கு மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதன் காரணமாக ஸ்ரீநகரில் இருந்து லே செல்வதற்கான பயண நேரம் தற்போதைய 3.5 மணி நேரங்களில் இருந்து 15 நிமிடங்களாகக் குறையும்.

இந்தியாவில் பொது போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்காக, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் மற்றும் கிரேட்டர் இலண்டன் அதிகார அமைப்புச் சட்டம், 1999 (இங்கிலாந்து) இன்கீழ் நிறுவப்பட்ட

“இலண்டனுக்கான போக்குவரத்து (Transport for London)” என்ற சட்டபூர்வ அமைப்பு ஆகியவற்றுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து மற்றும் செயலாக்கத்திற்கு மத்திய அமைச்சரவை தன்னுடைய அனுமதியை வழங்கியுள்ளது.

கங்கை ஆற்றின்மீது, தேசிய நெடுஞ்சாலை 1-ன் ஹால்டியா - வாரணாசிக்கு இடையிலான 1,380 கிமீ தூரத்திற்கு வழி செலுத்துதல் திறன் அதிகரிப்புக்காக ஜல் மார்க் விகாஸ் திட்ட (JalMargVikas Project) செயலாக்கத்திற்கு பொருளாதார விவகாரங்களுக்கான கேபினட் கமிட்டி, அனுமதி வழங்கியுள்ளது.

அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்கும் நன்கொடையாளர்கள் அதை வழிசெலுத்துவதற்காக, அரசியல் நிதிக்கான தேர்தல் பத்திரங்கள் பற்றிய விவரங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது. அரசியல் கட்சிகளுக்கு மிகவும் வெளிப்படையாக நிதி வழங்க வேண்டும் என்பதற்காக இந்த தேர்தல் பத்திரங்கள் பற்றிய திட்டம் மத்திய நிதிநிலை அறிக்கை 2017ல் அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக தேர்தல் நிதிக்கு அத்தகைய தனித்துவமான பத்திரங்களை வழங்கும் நாடு உலகிலேயே முதலாவது என்ற பெருமையை இந்தியாவிற்குப் பெற்றுத் தந்துள்ளது.

நேர்மறை அமைதி அட்டவணையில் மொத்தம் உள்ள 163 நாடுகளில் இந்தியா 90வது இடத்தில் உள்ளது.

இஸ்ரேலி டாங்கு எதிர்ப்பு ஏவுகணைக்கான 500 மில்லியன் டாலர்கள் ஒப்பந்தத்தை இந்தியா இரத்து செய்துள்ளது.

## <u>பாராளுமன்ற மசோதாக்கள்</u>

### பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் இடங்கள் மற்றும் அழிவுகள் (திருத்த) மசோதா 2017

- பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைச் சுற்றியுள்ள தடை செய்யப்பட்ட இடங்களில் கட்டமைப்புத் திட்டங்களை மேற்கொள்ள ஏதுவாக, பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் இடங்கள் மற்றும் அழிவுகள் (திருத்த) மசோதா 2017ஐ மக்களவை நிறைவேற்றியது. இந்த மசோதாவானது பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் இடங்கள் மற்றும் அழிவுகள் (Ancient Monuments and Archaeological Sites and Remains) சட்டம், 1958ஐ திருத்தம் செய்கிறது.

- **பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் இடங்கள் மற்றும் அழிவுகள் சட்டம் 1968 -** தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பண்டைய இடங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள், தொல்பொருளியல் இடங்கள் மற்றும் அழிவுகளை பாதுகாப்பதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. இந்தச் சட்டமானது தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளை வரண்முறை செய்வதற்கு வழிவகை செய்கிறது. அத்துடன் சிற்பங்கள், குடைவுகள் மற்றும் அது போன்ற இதர பொருட்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. இது 1958ல் நிறைவேற்றப்பட்டது.

**நபார்டு (திருத்த) மசோதா, 2017**

- நபார்டு வங்கியின் மூலதனத்தை மத்திய அரசு அனுமதிப்பதற்கான எல்லையை 5,000 கோடி ரூபாயிலிருந்து 30,000 கோடி ரூபாயாக அதிகரிப்பதற்கான ஒரு மசோதாவிற்கு நாடாளுமன்றம் தன்னுடைய ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இந்த மசோதாவானது வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி சட்டம், 1981ஐ திருத்துவதற்கு முனைகிறது.
- இந்த 1981 சட்டமானது, ஊரகப் பகுதிகளில் வேளாண்மை மற்றும் தொழில் வளர்ச்சிக்காக கடன் வழங்குதல் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் முறைப்படுத்துதலுக்கு பொறுப்பு வகிக்கும் வண்ணம் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியை நிறுவுவதற்கு வழிவகை செய்துள்ளது.

**திவால் மற்றும் திவால் நிலை சட்டத் திருத்த மசோதா, 2017 -** இந்த மசோதா திவால் மற்றும் திவால் நிலை சட்டம் 2016ஐத் திருத்தி, நவம்பர் 2017ல் கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டத்துக்குப் பதிலாக மாறுகிறது. இதன் வாயிலாக தற்போதைய சட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைத்து தீர்மான நடைமுறையை மேலும் வலுவுள்ளதாக ஆக்குகிறது.

## மாநிலங்கள்

1. இந்தியாவின் இரண்டாவது பெரிய கூரை சூரிய ஆலைத் திட்டத்தை இந்திய எரிவாயு நிறுவனம் (கெயில்) உத்தரப் பிரதேசத்தில் தொடங்கி வைத்துள்ளது.
2. ஒட்டு மொத்த நாகாலாந்து மாநிலம், சர்ச்சைக்குரிய ஆயுதப்படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின்படி, மேலும் ஆறு மாதங்களுக்கு, ஜூன் கடைசி

வரை, "பிரச்சினைக்கு உரிய பகுதி" என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமானது முன்னறிவிப்பு ஏதுமின்றி எந்த ஒரு இடத்தையும் சோதனை செய்வதற்கும், எவரையும் கைது செய்வதற்கும் ஆயுதப் படையினருக்கு அதிகாரம் அளிக்கிறது.

3. வடகிழக்கு பிராந்தியத்தில் சிக்கிம் மாநிலத்திற்கு அடுத்ததாக திறந்த வெளிக் கழிப்பிடம் இல்லாத இரண்டாவது மாநிலமாக அருணாசலப் பிரதேச மாநிலம் உருவெடுத்துள்ளது.
4. ஜார்க்காண்ட முதலமைச்சர் ரகுபர் தாஸ் "சௌபாக்ய யோஜனா" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டமானது அனைவருக்கும் மின்சார வசதி கிடைப்பதற்கு வழி செய்கிறது.
5. இமாசலப் பிரதேசத்தின் பிலாஸ்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனையை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

## <u>உலகம்</u>

1. உலகிலேயே ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான ஊதியம் வழங்குவதை சட்டபூர்வமாக்கிய முதலாவது நாடு ஐஸ்லாந்து ஆகும்.
2. சவுதி அரேபியாவும், ஐக்கிய அரபு எமிரேட்டுகளும் மதிப்பு கூட்டு வரியை அறிமுகம் செய்துள்ளன. இதுவரை வரி ஏதுமில்லாமல் இருந்து வந்த இந்த அரபு நாடுகளுக்கு இதுவே முதலாவது வரியாகும்.
3. நீருக்கடியில் ஒரு புதிய கண்காணிப்பு வலையமைப்பை சீனா வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது. இந்த வலையமைப்பானது, இந்தியப் பெருங்கடலையும் உள்ளிட்ட பட்டு சாலை கடல்சார் பாதை (maritime Silk Road) முழுவதும் சீனாவைப் பாதுகாத்துக் கொள்வதோடு அல்லாமல், தன்னுடைய நீர்மூழ்கிக் கப்பல்கள் இலக்குகளை நோக்கி மேலும் வலுவான செயல்படுவதற்கு உதவி செய்கின்றன.
4. சந்தை மடக்கு மூலம் எதிரியத்தை (ethereum) பின்னுக்குத் தள்ளி, இரண்டாவது பெரிய கிரிப்டோ நாணயமாக ரிப்பில் உருவெடுத்துள்ளது.

## <u>அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்</u>

1. **புதிய வகை இஞ்சி சிற்றினங்கள்** - இந்திய தாவரவியல் சர்வே நிறுவனத்தைச் (Botanical Survey of India) சேர்ந்த விஞ்ஞானிகள் வடகிழக்கு இந்தியாவின் கிழக்குக் கடைசி மாவட்டங்களில் இஞ்சியின் இரண்டு புதிய சிற்றினங்களைக் கண்டுபிடித்துள்ளனர். அவை *Hedychium*

*chingrmeianum* மற்றும் *Caulokaempferiadinabandhuensis* என்று பெயரிடப்பட்டுள்ளன. இந்த இரண்டு தாவரங்களுமே ஜிஞ்சிபெரேசியே (*Zingiberaceae*) என்ற குடும்பத்தைச் சேர்ந்தவை ஆகும். சாதாரணமாகக் காணப்படும் இஞ்சியும் (ஜிஞ்ஜிபர் அ∴பிசினல்) இந்தக் குடும்பத்தையே சேர்ந்ததாகும்.

2. **இரவுத் தவளை சிற்றினம்** - மேற்கு மலைத் தொடரில் கேரளாவின் மலபார் வன விலங்கு உயிரியல் பூங்காவில் மேவா சிங்கின் இரவுத் தவளை (*Nyctibatrachusmewasingtii*) என்ற ஒரு புதிய வகை சிற்றினத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். நடத்தைச் சூழலியல் மற்றும் உயர் விலங்கின ஆய்வில் வனவிலங்கு விஞ்ஞானி மேவா சிங் அவர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பை கௌரவிக்கும் விதமாக இந்தப் பெயர் அந்தத் தவளை இனத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

3. **சிஸ்டூரா லார்கெடென்சிஸ் (SchisturaLarketensis) -** மேகாலயா குகைளில் புதிய வகை குருட்டு மீன் இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மீன் இனத்திற்கு அந்தக் குகை கண்டுபிடிக்கப்பட்ட லார்கெட் கிராமத்தின் பெயரே வைக்கப்பட்டுள்ளது. அந்தக் குகையானது உள்ளூர் மக்கள் உயிர்பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதற்கு ஊக்குவிப்பதாக உள்ளது.

4. **நான்கு புதிய பிசின் வகை சிற்றினங்கள் கண்டறியப்பட்டள்ளன -** அருணாசலப் பிரதேச மாநிலத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள கிழக்கு இமயமலையின் பல்வேறு பகுதிகளில் இருந்து இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை இம்பேடியன்ஸ் ஹரிடாசானியை (*Impatiens haridasanii*),*இம்பேடியன்ஸ் சூடோசிட்ரினா (Impatiens pseudocitrina), இம்பேடியன்ஸ் நிலலோஹிட்டே (Impatiens nilalohitae) மற்றும் இம்பேடியன்ஸ் ராயின்ஜென்சிஸ் (Impatiens roingensis) ஆகும்.*

5. **பார்க்கர் சூரிய ஆய்வு** - நாசா அமைப்பு சூரியனின் வெளி வளிமண்டலத்தை ஆய்வு செய்வதற்காக 2018ல் பார்க்கர் சூரிய ஆய்வை மேற்கொள்ள உள்ளது. இந்த ஆய்வானது டெல்டா 4 கன செலுத்து வாகனத்தில் (Delta IV Heavy launch vehicle) இருந்து தொடங்கி வைக்கப்படும். அது தன்னுடைய அறிவியல் புலனாய்வுகளை கடுமையான வெப்பம் மற்றும் சூரிய கதிர்வீச்சு அபாயம் உள்ள பகுதிகளில் மேற்கொள்ளும்.

## செய்திகளில் இடம் பிடித்த நபர்கள்

1. ஏ.பி. மாத்தூர் - அஸ்ஸாமின் ஐக்கிய விடுதலை முன்னணி அமைப்புடன் (உல்.ஃ.பா) பேச்சு வார்த்தை நடத்துவதற்காக அரசு சார்பில் நியமிக்கப்பட்டவர்.
2. விஜய் கேஷவ் கோகலே - வெளியுறவுத்துறை செயலாளர்
3. சௌமீலௌ போபேயெ மைகா (Soumeylou Boubeye Maiga) - மாலியின் புதிய பிரதமர்
4. ராஜிந்தர் கன்னா - துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர்
5. சலீல் பரேக் - இன்.ஃ.போசிஸ் முதன்மைச் செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
6. புகழ்பெற்ற உருதுக் கவிஞர் அன்வர் ஜலால்பூரி 71வது வயதில் காலமானார்.

## விருதுகளும் கௌரவங்களும்

இந்தியாவின் பெருமைக்குரிய கொள்கலன் துறைமுகமாகிய ஜவஹர்லால் நேரு துறைமுகம், சமுத்ர மந்தன் (**SamudraManthan**) - இந்த ஆண்டிற்கான சிறந்த அக்கறை நிறவனம் என்ற விருதைப் பெற்றுள்ளது.

## விளையாட்டுகள்

1. **ரஞ்சி கோப்பை -** டெல்லியைத் தோற்கடித்து விதர்பா அணி தன்னுடைய முதலாவது பட்டத்தை வென்றது.
2. **61வது தேசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் -** புது டெல்லியில் நடைபெற்றது. ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டர் பிரிவில் ஷாஜர் ரிஜ்வி (Shahzar Rizvi) தங்கப் பதக்கம் வென்றார்.
3. **கோல்ப் -** பட்டயாவில் நடைபெற்ற போட்டியில் இந்திய கோல்ப் வீரர் ஷிவ் கபூர் ராயல் கோப்பையை வென்றார். இது 2017ஆம் ஆண்டில் அவர் பெற்ற மூன்றாவது ஆசிய பயண பட்டம் ஆகும்.

# ஜனவரி 6 - 10
# இந்தியா

வருமான வரித்துறையானது அதனுடைய தேசிய வலைத் தளத்தில் “ஆன்லைனில் நேரடி அரட்டை - உங்களது சந்தேகங்களைக் கேளுங்கள்” என்ற பிரபலமான ஒரு வாக்கியத்தைக் குறிப்பிட்டு ஒரு ஆன்லைன் அரட்டை சேவை வசதியைத் தொடங்கி வைத்துள்ளது.

நாட்டின் ஒட்டு மொத்த உழைப்பாளர் மக்கள் தொகையில் பெரும்பகுதியைக் கொண்ட (83 விழுக்காடு) அமைப்பு சாரா பணியாளர்களுக்கு மிகவும் அவசியமான சமூகப் பாதுகாப்பை குறைந்த கட்டணத்தில் அளிக்கும் நோக்கத்தில், அட்டல் ஓய்வூதியத் திட்டம் (Atal Pension Yojana) - ஜுன் 1, 2015 முதல் செயல்பாட்டுக்கு வந்தது.

இ-சன்சாத் மற்றும் இ-விதான் - இவை இந்தியப் பாராளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்றங்களின் செயல்பாடுகளை காகிதத்தின் உதவி அல்லாமல் நிகழ்த்தும் பொருட்டு, டிஜிட்டல் இந்தியா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் பணி முறைத் திட்டங்கள் (mission mode projects) ஆகும். இவை பாராளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்றங்களின் விவாதங்கள், உரைகள், குழு அறிக்கைகள் மற்றும் வினாக்களை டிஜிட்டல்மயமாக்கி இணையத்தில் கிடைக்க வகை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

திரை அரங்குகளில் திரைப்படங்களைத் திரையிடுவதற்கு முன்பாக தேசிய கீதத்தை இசைக்க வேண்டும் என்பதை கட்டாயமாக அல்லாமல், விருப்பத் தேர்வாக ஆக்கி உச்ச நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையானது, திரையரங்குகளில் தேசிய கீதம் இசைப்பதைக் கட்டாயமாக்கி உச்ச நீதி மன்றம் பிறப்பித்த முந்தைய நவம்பர் 2016 ஆணைக்கு மாற்றாக வழங்கப்பட்டுள்ளது.

2020 வாக்கில் கங்கையை தூய்மைப் படுத்துவதற்கான தனது திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய பாதுகாப்பு அமைச்சகம், இந்திய இராணுவத்தின் முன்னாள் இராணுவ வீரர்களைக் கொண்ட, பிராந்திய இராணுவப் படைப் பிரிவைத் (Territorial Army) தோற்றுவிக்க இசைவளித்துள்ளது. இது, கங்கையைத் தூய்மை செய்வதற்கான ஒருங்கிணைப்பு முகமையாகிய கங்கையைத் தூய்மைப் படுத்துவதற்கான தேசிய இயக்கத்தின் (National Mission for Clean Ganga) பிராந்திய இராணுவப் படைப் பிரிவின் கலப்பு சூழலியல் செயற்படை

(*Composite Ecological Task Force*) என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த கலப்பு சூழலியல் செயற்படைப் பிரிவானது உத்தரப் பிரதேசத்தின் அலகாபாத்தில் ஒரு முன்னோடித் திட்டமாகத் தொடங்கி வைக்கப்படும்.
ஹெபடைடிஸ் சி-ஐ இலவசமாகக் குணப்படுத்துவதற்காக, வைரல் ஹெபடைடிசைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய திட்டம் (*National Programme for Control of Viral Hepatitis*) என்ற ஒரு புதிய திட்டத்தை, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் 2018-19ஆம் நிதி ஆண்டில் தொடங்கி வைக்க உள்ளது. இந்தப் புதிய திட்டத்தின்கீழ், அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் இலவசமாக வழங்கப்படும் வைரல் எதிர்ப்பு மருந்து மூலம் ஹெபடைடிஸ் சி-ஐ குணப்படுத்துவதிலேயே கவனம் செலுத்தப்படும்.

பெண்களின் கல்வி குறித்த பொருளை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனைக் கல்வி வாரியத்தின் (Central Advisory Board of Education) துணைக் குழுவானது, நாடு முழுவதும் பெண்களுக்கு முதுநிலைப் பட்டப்படிப்பு வரை இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

மகாத்மா காந்தி வரிசையின்கீழ் புதிய 10 ரூபாய் நோட்டு: இந்தப் புதிய வங்கி நோட்டுகள் சாக்கலேட் பழுப்பு நிறத்தை அடிப்படை நிறமாகக் கொண்டிருக்கும். அத்துடன் அதன் பின்பக்கத்தில் ஒடிசாவின் கோனார்க் சூரியனார் கோவிலின் படத்தைக் கொண்டிருக்கும்.

விழிப்பு நடவடிக்கை (Operation Alert) - ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் 200 கிமீ சர்வதேச எல்லை நெடுகிலும் எல்லைக்கு அப்பாலில் இருந்து தீவிரவாதிகள் ஊடுருவல் அதிகரித்திருப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக “விழிப்பு நடவடிக்கை” என்ற ஒரு நடவடிக்கையை எல்லைப் பாதுகாப்புப் படை மேற்கொண்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இரட்டை வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் நபர்களுக்கு பொருளாதார அதிகாரம் வழங்குவதற்காக பஞ்சாப் தேசிய வங்கி மற்றும் தேசிய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நிதி மற்றும் அபிவிருத்திக் கழகம் (National Scheduled Castes Finance and Development Corporation) ஆகியவை இணைந்து செயல்படுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

## மாநிலங்கள்

ஒடிசாவில் உள்ள சிமிலிபால் புலிகள் சரணாலயத்தில், அந்தப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டிருந்த, அழியும் நிலையில் உள்ள மங்கிடியா (Mankidia) பழங்குடியின மக்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்

மற்றும் இதர பாரம்பரிய வனவாழ் மக்கள் (வன உரிமைகள் அங்கீகார) சட்டம், 2006ன்படி, வசிப்பிடம் மறுக்கப்பட்டுள்ளனர். இந்த மங்கிடியா என்பது முக்கியமாக அழியும் நிலையில் உள்ள 13 பழங்குடியின பிரிவுகளில் ஒன்றாகும். விளிம்பு நிலையில் உள்ள இந்தப் பிரிவு மக்கள் சிமிலிபால் பகுதியில் வளமாகக் காணப்படும் சியாளி இழையைப் பயன்படுத்தி கயிறு திரிக்கும் தொழிலை நம்பியே வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

ஒட்டு மொத்த உயர் கல்வி சேர்க்கை வீதத்தில் நாட்டிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாடு உருப் பெற்றுள்ளது. 18-23 வயது குழுக்களை அடிப்படையாகக் கொண்டு உயர் கல்விக்கான ஒட்டு மொத்த சேர்க்கை வீதம் கணக்கிடப்படுகிறது.

மேற்கு வங்காள அரசு தன்னுடைய அதிகாரபூர்வ சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தச் சின்னத்தை கருத்துருவாக்கி வடிவாக்கம் செய்தவர் முதலமைச்சர் மமதா பானர்ஜி ஆவார். இந்த மாநிலச் சின்னம் தேசியச் சின்ன அசோகர் தூணுடன் கூடிய “பிஸ்வா வங்களா” லோகோ ஆகும்.

அமேசான் இந்தியாவின் ஆண்டு வாசிப்பு போக்குகள் அறிக்கை 2017, நடத்திய சர்வேயின்படி, இந்தியாவில் அதிக வாசிப்பாளர்களைக் கொண்ட நகரமாக பெங்களுரு உருப்பெற்றுள்ளது. மும்பை மற்றும் டெல்லி ஆகிய நகரங்கள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளன.

ஏற்பாட்டியல் எளிமைக்கான அட்டவணையில் பல்வேறு மாநிலங்களிடையே குஜராத் முதலிடம் பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து அடுத்த இரண்டு இடங்களை பஞ்சாப் மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்கள் பிடித்துள்ளன.

அருணாசலப் பிரதேச மாநிலம் தனது முதலாவது திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தைப் பெற உள்ளது. நாட்டிலேயே இத்தகைய இரண்டாவது நிறுவனம் இதுவே ஆகும்.

மாற்றுத் திறனாளிகளுக்கான இந்தியாவின் முதலாவது பூங்கா தெலுங்கானா மாநிலத்தின் ஐதராபாத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

குடியா - இமாசலப் பிரதேச மாநில அரசின், வாரம் முழுவதும் 24 மணி நேரமும் செயல்படும் மகளிருக்கான தொலைபேசி உதவிச் சேவை எண் ஆகும்.

பாதுகாப்புக் கண்டுபிடிப்பு மையம் - கோயம்புத்தூரில் அமைக்கப்பட உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

**பிரத்யூஷ் (Pratyush)**

- பிரத்யூஷ் என்று அழைக்கப்படும் இந்தியாவின் அதிவிரைவு மற்றும் முதலாவது பல்-பீட்டா ∴பிளாப்ஸ் (multi-petaflops) சூப்பர் கணினி புனேவில் உள்ள இந்திய வெப்ப மண்டல வானிலை ஆய்வு மையத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த சூப்பர் கணினியானது சூரியன் என்று பொருள் படும்படியாக “பிரத்யூஷ்” என்று பெயரிடப்பட்டுள்ளது.
- பருவ காலம், அதீத காலநிலைகள், சூறாவளிகள், ஆழிப் பேரலைகள், நில நடுக்கங்கள், காற்று தரம், மின்னல், மீன்பிடித்தல், வெப்ப மற்றும் குளிர்ந்த அலைகள், வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற சூழ்நிலைகளில் சிறப்பாக முன்னறிவித்தல் செய்வதற்கு இது இந்தியாவிற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.
- பிரத்யூஷ் - பல கணினிகளின் வரிசைகளைக் கொண்டதாகும். இது 6.8 பீடா பிளாப்ஸ் என்ற உயர்ந்தபட்ச ஆற்றலை வெளிப்படுத்தும் திறன் கொண்டதாகும்.
- இந்த பிரத்யூஷ் ஆனது உலக அளவில் வானிலை மற்றும் காலநிலை ஆய்வுக்காகவே பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட நான்காவது அதி விரைவு சூப்பர் கணினி ஆகும். இது ஜப்பான், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் எந்திரங்களில் பயன்படுத்தப்படுகிறது.
- ஒரு பீட்டா பிளாப்ஸ் என்பது ஒரு வினாடிக்கு ஒரு மில்லியன் மிதவைப் புள்ளி செயல்பாடுகள் என்பதைக் குறிப்பதாகும். அது ஒரு கணினியின் செயல் திறனை பிரதிபலிக்கும் ஒரு அளவீடு ஆகும்.

**சார்லி - 435:** இந்திய கடலோர காவல் படையின் ரோந்துக் கப்பல். இது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் காரைக்காலில் பணியில் சேர்க்கப்பட்டது. இந்தக் கப்பலானது கிழக்குக் கடற்கரை பிராந்தியத்தில் சென்னை முதல் கன்னியாகுமரி வரையில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு உதவி செய்யும். மோசமான வானிலை காரணமாக கடலில் தத்தளிக்கும் மீனவர்களைக் காப்பாற்றுவதற்கும் இது பெரிதும் பயன்படும்.

மீவளி மண்டலத்தை (ionosphere) ஆய்வு செய்வதற்காக, தேசிய வானூர்தி மற்றும் விண்வெளி நிர்வாகம் (நாசா), கோல்டு மற்றும் ஐகான் என்ற இரண்டு விண்வெளிப் பயணங்களை இந்த ஆண்டின் பின் பகுதியில் தொடங்கி வைக்க உள்ளது.

அமெரிக்காவின் வட கரோலினா மாகாணத்தில் உள்ள டியூக் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் முதன் முறையாக, ஸ்டெம் செல்களில் இருந்து செயல்படத்தக்க மனித எலும்புத் தசையை ஆய்வுக் கூடத்தில் உருவாக்கியுள்ளனர்.

## செய்திகளில் இடம் பிடித்த நபர்கள்

கே. சிவன் (தமிழ்நாடு) - இந்திய விண்வெளித் துறையின் செயலாளர் மற்றும் விண்வெளி ஆணையம் மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவர்.

அருண் ஜெட்லி குழு - சாத்தியமில்லாத நிலையில் துறைமுகங்களில் ஏற்கனவே உள்ள பழைய திட்டங்களை என்ன செய்வது என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு.

பி.ஆர் ஷர்மா குழு - திரையரங்குகளில் தேசிய கீதம் இசைப்பது குறித்த கோரிக்கையை பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு.

திலிப் ஆஸ்பெ (DilipAsbe) - இந்திய தேசிய பணக் கொடுப்புக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர்.

டி.எஸ். திருமூர்த்தி - பொருளாதார உறவுகள் செயலாளர்.

இந்தியாவில் பிறந்த தொழில் அதிபர் சன்னி வர்கீஸ் - நீடித்த வளர்ச்சிக்கான உலக வணிக கவுன்சிலின் தலைவர்.

**ஏ.ஆர். ரஹ்மான் - சிக்கிம் மாநிலத்தின் விளம்பரத் தூதர்.**

நிலவின்மீது நடந்து பின்னர் முதலாவது விண்வெளி ஓடத்தை இயக்கிய நாசாவின் விண்வெளி வீரர் ஜான் யங் (John Young) அமெரிக்காவின் ஹௌஸ்டனில் காலமானார்.

## விருதுகளும் கௌரவங்களும்

**பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார்** - பொது வாழ்வில் நேர்மையைக் கடைபிடித்தமைக்காக முதலாவது முப்தி முகம்மது சயீத் விருது பெற்றார்.

**தங்க உலகங்கள் (Golden Globes) 2018**

- குறுகிய தொடர்கள் அல்லது தொலைக்காட்சி திரைப்படத்தில் மிகச் சிறந்த நடிகை : நிகோலி கிட்மான்
- மோஷன் படித்தில் (நாடகம்) நடித்த மிகச் சிறந்த துணை நடிகர் : சாம் ராக்வெல் மிகச் சிறந்த துணை நடிகர்: அலெக்சாண்டர் ஸ்கார்ஸ்கார்டு
- மிகச் சிறந்த நடிகர் (நகைச்சுவை / இசை): ஜேம்ஸ் ∴பிரான்கோ
- மிகச் சிறந்த அனிமேஷன் திரைப்படம்: கோகோ
- மிகச் சிறந்த அன்னிய திரைப்படம்: இன் தி ∴பேட் (In the Fade)
- மிகச் சிறந்த இயக்குநர்: கில்லெர்மோ டெல் டோரோ
- திரைப்படத்தில் (நகைச்சுவை / இசை) மிகச் சிறந்த நடிகை: சாயிர்ஸ் ரோனன்
- மிகச் சிறந்த திரைப்படம் (நகைச்சுவை / இசை): லேடி பேர்டு (Lady Bird)
- மிகச் சிறந்த நடிகர் (நாடகம்): கேரி ஓல்ட்மேன்
- மிகச் சிறந்த நடிகை (நாடகம்): ∴பிரான்செஸ் மெக் டார்மண்ட்
- மிகச் சிறந்த திரைப்படம் (நாடகம்): எப்பிங்குக்கு வெளியே மூன்று பில்போர்டுகள் (Three Billboards Outside Ebbing), மிசௌரி

## <u>மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள்</u>

உலக புத்தகக் கண்காட்சி 2018 - புது டெல்லி. இந்த நிகழ்ச்சியின் மையக் கருத்து, "சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றம்". இந்த ஆண்டுக்கான சிறப்பு விருந்தினராக ஐரோப்பிய யூனியன் விளங்கும்.

ஆசியான் இந்தியா பிரவாசி பாரதிய திவஸ் (ASEAN India Pravasi Bhartiya Diwas) 2018 - சிங்கப்பூர்.

இந்தியாவில் பிறந்த நபர்களின் முதலாவது - பாராளுமன்ற உறுப்பினர்களின் மாநாடு - புது டெல்லி.

**உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டம் 2018 - ஸ்விட்சர்லாந்தின் தாவோஸ் (Davos) - மையக் கருத்து, "பிளவுபட்டுள்ள உலகத்தில் பங்களிப்பு எதிர்காலத்தை உருவாக்குதல்."**

18வது அகில இந்தியா கொறடாக்கள் மாநாடு - உதய்பூர், ராஜஸ்தான்.

காவல்துறை டைரக்டர் ஜெனரல்கள் மற்றும் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் மாநாடு - டெல்லி.

சுகாதார அமைச்சர்களின் உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து குறித்த முதலாவது வட்ட மேசை மாநாடு - புது டெல்லி.

இந்திய அறிவியல் திரைப்பட விழாக்களின் மூன்றாவது பதிப்பு - கோவா

கோவாவின் இரண்டாவது பறவைகள் திருவிழா - கோடிகாவ் (Cotigao) வனவிலங்கு சரணாலயம், கனகோனா (Canacona).

சர்வதேச பட்டம் விடும் திருவிழா - சபர்மதி ஆற்றுப்படுகை, அகமதாபாத், குஜராத்.

## உலகம்

சீனா தலைமை ஏற்று நடத்தும் ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank) தனது முதலாவது அமெரிக்க டாலர் பண மதிப்புகளில் குறைந்தபட்சம் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான பத்திரங்களை ஜுன் 2018 வாக்கில் வெளியிட உள்ளது.

மத சுதந்திரத்தில் பாகிஸ்தானின் "கடுமையான அத்துமீறல்கள்" காரணமாக அமெரிக்க அரசு பாகிஸ்தானை ஒரு "சிறப்பு கண்காணிப்புப் பட்டியலில் வைத்துள்ளது.

இரான் நாடு தன்னுடைய நாட்டின் தொடக்கப் பள்ளிகளில் ஆங்கில மொழி பயிற்றுவித்தலைத் தடை செய்துள்ளது. அந்தப் பாடம் ஒரு "கலாச்சார ஆக்கிரமிப்பு" என்று அதற்கான காரணத்தைத் தெரிவித்துள்ளது.

## விளையாட்டுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள்

39வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை 2022ல் நடத்த உள்ள மாநிலம் - மேகாலயா

தொடக்க நிலை டாடா ஓபன் மகாராஷ்டிரா கோப்பைக்கான போட்டியில் ஆப்பிரிக்காவின் கெவின் ஆண்டர்சனைத் தோற்கடித்து பிரான்சின் கில்ஸ் சைமன் வெற்றி பெற்றார்.

**கோல்கட்டா ஓபன் 2018 சர்வதேச அழைப்பு ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டிகளில் ஆதித்ய மேத்தா வெற்றி பெற்றார்.**

ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் மற்றும் பெலிண்டா பென்கிக் ஆகியோர் ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஜெரெவ் மற்றும் ஏஞ்செலிக் கெர்பெர் ஆகியோரைத் தோற்கடித்து ஹாப்மன் கோப்பையைக் கைப்பற்றினர்.

# ஜனவரி 11 - 15

## இந்தியா

### தேசிய இளைஞர் திருவிழா

- இந்திய இளைஞர் பட்டாளத்தின் அடையாளமாகத் திகழும் சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளை (ஜனவரி 12) முன்னிட்டு இந்தத் திருவிழா தொடங்கப்படும்.
- இந்த தேசிய இளைஞர் திருவிழாவானது தேசிய தலைநகர் பிராந்தியத்தில் ஏற்பாடு செய்யப்படுவது இதுவே முதன் முறை ஆகும்.
- இந்தத் தேசிய இளைஞர் திருவிழாவை ஏற்பாடு செய்வதன் நோக்கம், நாட்டில் உள்ள இளைஞர்களை ஒன்று திரட்டி பல்வேறு செயல்பாடுகளில் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு மேடையை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே ஆகும்.
- இந்த தேசிய இளைஞர் திருவிழாவானது, நாட்டில் ஏற்பாடு செய்யப்படும் இந்த வகை இளைஞர் திருவிழாக்களிலேயே மிகவும் பெரிதானது ஆகும்.
- இது 22வது தேசிய இளைஞர் திருவிழா ஆகும். முதலாவது தேசிய இளைஞர் திருவிழா 1995ம் ஆண்டு போபாலில் நடைபெற்றது.

### ஸ்.ஃப்ரூட்டி செயலி (SFOORTI Application)

- போக்குவரத்து ஓட்டத்தைத் திட்டமிடுதல் மற்றும் சரக்குகள் எடுத்துச் செல்லப்படுவதை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, ஒரு மிகப்பெரிய டிஜிட்டல் முன் முயற்சியாக இரயில்வே அமைச்சகம் ஸ்.ஃப்ரூட்டி (Smart Freight Operation Optimisation & Real Time Information - சரக்குகளைச் செம்மையாகக் கையாளுதலை மேம்படுத்துதல் மற்றும் மெய் நேர தகவல்கள்) என்ற ஒரு செயலியைத் தொடங்கி வைத்துள்ளது.
- இந்தச் செயலியானது சரக்குகளைக் கையாளும் மேலாளர்களுக்கானது ஆகும். அது புவியியல் தகவல் அமைப்பு (Geographic Information System) பார்வை மற்றும் டேஷ் போர்டைப் பயன்படுத்தி, சரக்குகள் வர்த்தகத்தைக் கண்காணிப்பு செய்யவும் மேலாண்மை செய்யவும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

ஜைன மதத்தவர்களே இந்தியாவில் உள்ள சமூகத்தினரிடையே அதிக செல்வந்தர்களாக விளங்குகின்றனர். டெல்லி மற்றும் பஞ்சாப் மாநிலங்கள் மிகவும் பணக்கார மாநிலங்களாகும். பீகார் மிகவும் ஏழ்மையான மாநிலம் ஆகும். இதுவே மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் சமீபத்தில்

 PH: 24339436, 42867555, 9840226187

வெளியிட்ட நான்காவது சுற்று தேசிய குடும்ப சுகாதார சர்வேயின் (National Family Health Survey) கண்டுபிடிப்புகள் ஆகும்.

இஸ்ரேல் நாட்டுடன் நாம் கொண்டுள்ள நட்பின் நல்லெண்ண அடையாளமாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெடன்யாஹு (Benjamin Netanyahu) அவர்களின் வருகையின்போது, இந்திய அரசு டெல்லியின் தீன் மூர்த்தி சௌக் என்று அழைக்கப்படும் போர் நினைவுச் சின்னத்தை தீன் மூர்த்தி ஹைஃபா சௌக் என்று பெயர் மாற்றி வைத்துள்ளது.

உரத் தொழில்களில் இந்தியாவின் முதலாவது அன்னிய நேரடி முதலீடு: நார்வேயின் உரத் தொழில்கள் பெருநிறுவனமாகிய யாரா இன்டர்நேஷனல்.

நிதி ஆயோக்கின் (NITI Aayog) டேங்க் டு ரேங்க் 15 பின்தங்கிய (விருப்பமுள்ள) மாவட்டங்களில் ஏப்ரல் 2018 வாக்கில் செயல்படுத்தப்படும்.

உலகப் பொருளாதார மன்றம் அதனுடைய உலக உற்பத்தி அட்டவணையில் (Global Manufacturing Index) மொத்தம் உள்ள 100 நாடுகளில் இந்தியாவை 30 வது இடத்தில் பட்டியலிட்டுள்ளது. உலகப் பொருளாதார மன்றத்தின் பட்டியலின்படி முதல் இரண்டு இடங்களைப் பிடித்த நாடுகள்: ஜப்பான் மற்றும் தென் கொரியா.

இந்தியாவின் வளர்ச்சி 7.3 விழுக்காடு அளவில் இருக்கும் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.

## மாநிலங்கள்

நிலக்கரியை செயற்கை எரிவாயுவாக மாற்றும் இந்தியாவின் முதலாவது ஆலை கெயில் (GAIL) நிறுவனத்தால் ஒடிசாவில் அமைக்கப்படும்.

## உலகம்

பெல்ட் மற்றும் சாலை முன் முயற்சியின் (Belt and Road initiative) வழியில் உள்ள நாடுகளுக்கு ஊடுருவல் மற்றும் நிலை நிறுத்துதல் சேவையை 2018ஆம் ஆண்டின் இறுதிக்குள் வழங்குவதற்காக சீனா, இரண்டு பெய்டௌ-3 (BeiDou-3) செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

உலகின் மிகப்பெரிய சூரிய வெப்ப ஆலை தெற்கு ஆஸ்திரேலியாவில் கட்டப்பட உள்ளது.

நேபாளம், சீனாவில் இருந்து இணைய இணைப்பு சேவையைப் பெறத் தொடங்கியுள்ளது.

## இந்தியாவும் உலகமும்

இங்கிலாந்தில் சட்ட விரோதமாகக் குடியேறிய இந்தியர்களைத் திரும்ப அழைத்துக் கொள்ள ஏற்பாடு செய்தல் மற்றும் குற்றவாளிகள் பற்றிய ஆவணங்களைப் பரிமாறிக் கொள்ளுதல் அகியவற்றுக்காக இந்தியாவும், இங்கிலாந்தும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் இரண்டு நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதற்காக இந்தியாவும் இலங்கையும் நான்கு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் இளைஞர் தூதர் அலுவலகத்திற்கு, இளைஞர்களை அதில் ஈடுபடுத்திக் கொள்வது என்ற அதன் இலக்கினை எட்டுவதற்கு உதவி செய்வதற்காக இந்தியா 50,000 அமெரிக்க டாலர்களை பங்களித்துள்ளது.

சீனாவின் ஆதரவுடன் கூடிய ஆசியான் கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் 2017ல் அதிக கடன் பெற்ற நாடு இந்தியா ஆகும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

**துருவ செயற்கைக் கோள் செலுத்து வாகனம் (PSLV) -C40**

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தன்னுடைய 100வது செயற்கைக் கோளை ஜனவரி 12 அன்று ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து செலுத்தியுள்ளது.
- தன்னுடைய 42வது பயணத்தில், துருவ செயற்கைக் கோள் செலுத்து வாகனம் சி40, “கார்ட்டோசாட்-2” என்ற வானிலை ஆய்வு மைய செயற்கைக் கோள் மற்றும் 30 இதர செயற்கைக் கோள்களை எடுத்துச் செல்லும்.
- 2018ஆம் ஆண்டில் இஸ்ரோ அனுப்பும் முதல் செலுத்துகை இதுவே ஆகும்.
- கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அனுப்பிய ஐஆர்என்எஸ்எஸ்-1எச் தோல்விக்குப் பிறகு இந்தியா அனுப்பும் முதலாவது செயற்கைக் கோளும் இதுவே ஆகும்.

**ரிசாவோ (Rizhao):** இது சீனாவில் புதிய ஏவுகனை போர் வீரன் ஆகும். இது சீனாவின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஏவுகனைப் போர் வீரன் ஆகும். இதற்கு சீனாவின் ஷன்டாங் மாகாணத்தில் உள்ள ரிசாவோ என்ற நகரத்தின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

***எல்சிஸ்மேஜிரோயென்சிஸ் (Elcysmaziroensis)-*** இது ஆந்திரப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய வகை அந்துப் பூச்சி ஆகும்.

இந்திய கடற்படை ஜஎன்எஸ் நிர்பிக் மற்றும் ஜஎன்எஸ் நிர்காட் ஆகிய போர்க்கப்பல்களை திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டது.

## செய்திகளில் இடம்பிடித்த நபர்களும் இடங்களும்

**இந்து மல்ஹோத்ரா -** உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக நேரடியாக நியமனம் பெற்ற முதலாவது பெண் வழக்கறிஞர்.

**அனில் கண்ணா -** இந்திய ஒலிம்பிக் சங்க நிதி ஆணையத்தின் தலைவர்.

**உமேஷ் சின்ஹா குழு -** தேர்தல் தொடர்பாக புதிய விதிகளை வகுப்பதற்காக நியமிக்கப்பட்டது (தேர்தலுக்கு முன்பாக சமூக ஊடகங்கள் மற்றும் இதர டிஜிட்டல் மேடைகளும் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன மற்றும் இந்த மாற்றங்களுக்கு ஏற்ப தேர்தல் நடத்தை நெறிமுறைகளை எவ்வாறு மாற்றியமைத்தல் போன்றவற்றை ஆய்வு செய்வதற்காக).

## விருதுகளும் கௌரவங்களும்

**நடிகை கஜோல் - Actress Kajol -**ஸ்வச் ஆதத் ஸ்வச் பாரத் முன் முயற்சி திட்டத்தின் வழக்கறிஞர் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**ஷாருக்கான் -** டாவோசில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டத்தில் கிரிஸ்டல் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டார். ‘இந்தியாவில் குழந்தைகள் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கு அவர் மேற்கொண்ட தலைமைப் பண்பின்’ காரணமாக அவர் இந்த விருதைப் பெறவுள்ளார். ’

41 பெண்களைக் கொண்டு இயங்கும் இந்தியாவின் முதலாவது அனைத்து மகளிர் இரயில் நிலையம், மாதுங்கா (மத்திய இரயில்வேயில் மகாராஷ்டிராவில் உள்ளது) லிம்கா உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது..

**இந்திய விமானப் படை “ஏழு மலைகளை” வெற்றி கொண்டுள்ளது** - இந்திய விமானப் படையைச் சேர்ந்த மலையேற்ற வல்லுநர் குழு ஒன்று, ஏற்கனவே ஆறு கண்டங்களில் உள்ள உயரமான மலைச் சிகரங்களை வெற்றிகரமாக அடைந்து சாதனை படைத்துள்ளது. அந்தக் குழு சமீபத்தில் அன்டார்க்டிகாவில் உள்ள வின்சன் சிகரத்தை நோக்கி தன்னுடைய பயணத்தை மேற்கொண்டுள்ளது. இதைத் தொடர்ந்து அந்தக் குழு ஏழு கண்டங்களிலும் உள்ள மிகப் பெரிய சிகரங்களை எட்டிய சாதனையைப் படைத்துள்ளது.

## மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள்

- “தர்ம - தாமா மரபுகளில் மாநில மற்றும் சமூக நிலை” என்பது பற்றிய 4வது சர்வதேச தர்ம தாமா மாநாடு பீகாரில் உள்ள நாலந்தா மாவட்டத்தின் ராஜ்கிரின் என்ற இடத்தில் நடைபெற்றது.
- மத்திய கல்வி ஆலோசனை வாரியத்தின் 65வது கூட்டம் - புது டெல்லி.
- பேரழிவு நெகிழ் திறன் கட்டமைப்பு என்ற தலைப்பிலான சர்வதேச கருத்தரங்கம் - புது டெல்லியில் நடைபெற்றது.
- நான்காவது ஆசியான் - இந்தியா வேளாண்மை மற்றும் வனம் குறித்த அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் - புது டெல்லி.
- இந்தியா மற்றும் மலேசிய நாட்டு அரசுகளுக்கு இடையே பாரம்பரிய முறை மருத்துவம் என்ற பொருளில் கூட்டுறவு பற்றிய 5வது இரு தரப்பு தொழில்நுட்பக் கூட்டம் - புது டெல்லி.
- “ராஷ்ட்ரிய சமஸ்கிருத மகோத்சவம் - 2018” இன் 7வது பதிப்பு - கர்நாடகா
- *பொருளாதார ஜனநாயக கூட்டம் - தானே, மகாராஷ்டிரா*

## விளையாட்டுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள்

- ஐதராபாத் வேட்டையாளர்கள் (Hyderabad Hunters) - ஐதராபாத்தில் மூன்றாவது பிரிமியர் பேட்மின்டன் லீக் போட்டிகளில் வெற்றி பெற்றனர்.
- தேசிய மகளிர் குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் மணிப்பூரைச் சேர்ந்த சர்ஜுபாலா தேவி (48 கிகி), தங்கப் பதக்கத்தையும் அத்துடன் மிகச் சிறந்த குத்துச் சண்டை வீரருக்கான கோப்பையையும் வென்றார்.
- பனிச்சறுக்குப் போட்டியில் இமாசலப் பிரதேசத்தின் ஆஞ்சல் தாக்கூர் இந்தியாவின் முதலாவது சர்வதேச பதக்கத்தை வென்று வரலாற்றை நிகழ்த்தியுள்ளார். அவர், துருக்கியில் ஃபெடரேஷன் இன்டர்நேஷனல் டி ஸ்கை (Federation Internationale de Ski) என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த பெருமைக்குரிய ஆல்பைன் எஜ்டெர் 3200 கோப்பைப் போட்டியில் வெண்கலம் வென்றார்.

 PH: 24339436, 42867555, 9840226187

# ஜனவரி 16 - 25

**டிஜிட்டல் பலகை செயல் திட்டம் (Operation Digital Board) -** பள்ளிகளில் சிறந்த டிஜிட்டல் கல்வியை வழங்குவதற்காக டிஜிட்டல் பலகை செயல் திட்டம் என்ற ஒரு கருத்து கொண்டு வரப்பட்டது. இது பள்ளிகளுக்கு கற்பித்தல் மற்றும் கற்றலில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும். இந்த டிஜிட்டல் பலகை செயல் திட்டமானது மத்திய மாநில அரசுகள், மத்திய தொழில் ஆராய்ச்சிக் கவுன்சில் (CSIR) மற்றும் சமூகத்தின் ஆதரவுடன் தொடங்கி வைக்கப்படும்.

**சைபர் சுரக்ஷிட் பாரத் முன்முயற்சி (Cyber Surakshit Bharat initiative) -** "டிஜிட்டல் இந்தியா"வை நோக்கிய அரசின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க இந்தியாவில் இணைய பாதுகாப்பு சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்கான இது தேசிய மின்-ஆளுமைப் பிரிவு (National e-Governance Division) மற்றும் தொழில்துறை பங்குதாரர்களுடன் இணைந்து தொடங்கி வைக்கப்பட்டது.

**அம்ரித் (AMRIT) திட்டம் -** சிகிச்சைக்காக குறைந்த செலவில் மருந்துகள் மற்றும் உள் வைப்புகள் (Affordable medicine and reliable implants for treatment) எனப்படும் அம்ரித் திட்டம், புற்று நோய் மற்றும் இதய நோய்களின் சிகிச்சைக்காக நோயாளிகள் செலவு செய்யும் தொகையைக் குறைப்பதன் வாயிலாக ஏழைகளுக்கும் மருத்துவ சிகிச்சை கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டமானது புற்று நோய் மற்றும் இதய நோய்களால் (தொற்றா நோய்கள்) பாதிக்கப்படும் நோயாளிகளுக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**கடல் ரோந்துக் கப்பல் விஜயா -** இந்திய கடலோர காவல் படைக்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட விஜயா என்று பெயரிடப்பட்ட இரண்டாவது கடல் ரோந்துக் கப்பலானது தமிழ்நாட்டில் உள்ள காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

**நமஸ்தே ஷலோம் (Namaste Shalom) -** இந்தியா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நட்பு நாடுகளுக்கு இடையே நிலவும் இருதரப்பு உறவுகளைப் பற்றிய ஒரு மாதாந்திர பத்திரிகை. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெடன்யாஹுவின் மும்பை வருகையை ஒட்டி "நமஸ்தே ஷலோம்" தொடங்கி வைக்கப்பட்டதை யூத சமூகம் வரவேற்றுள்ளது.

**மைத்ரி-2** - இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளின் எல்லை தாண்டிய உறவுகளை வலுப்படுத்துவதற்காக திரிபுராவில் உள்ள அகர்த்தலாவில் இருந்து தாக்கா வழியாக கோல்கட்டா செல்வதற்கான இரண்டாவது பயணிகள் பேருந்து தன்னுடைய பயணத்தைத் தொடங்கியது.

கண்டம் விட்டு கண்டம் தாண்டிச்சென்று தாக்கும் நீண்ட தூர பாலிஸ்டிக் ஏவுகனையாகிய அக்னி-5, ஒடிசாவில் உள்ள டாக்டர் அப்துல் கலாம் தீவிலிருந்து அதன் முழு திறமைக்கும் வெற்றிகரமாக பரிசோதித்துப் பார்க்கப்பட்டது..

சட்ட விரோதமாகக் குடியேறியுள்ள இந்தியர்களைத் திரும்ப அழைத்துக் கொள்ளுதல் மற்றும் குற்ற ஆவணங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றுக்காக இந்தியாவும் இங்கிலாந்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் தங்களிடையே இணைந்து செயல்படுவதற்காக இந்தியாவும் இலங்கையும் நான்கு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

உத்தராகண்ட் மாநிலத்தின் புறநகர்ப் பகுதிகளில் மேம்பட்ட தண்ணீர் விநியோகச் சேவைகளை மேற்கொள்வதற்காக பன்முக கடன் வழங்கும் நிறுவனமாகிய உலக வங்கியிடம் 120 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடன் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

இரசாயண ஆயுதங்கள் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் உட்பொருட்கள் ஏற்றுமதியில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வரும் முறைசாரா நாடுகள் குழுவாகிய ஆஸ்திரேலிய குழுவில் 43வது உறுப்பினராக இந்தியா சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆஸ்திரேலிய குழுவில் முழு நேர உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள முதலாவது தெற்காசிய நாடு இந்தியாவே ஆகும்.

ஊட்டச் சத்து மிக்க கம்பு வகை தானியங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் அந்த உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சன்ரைஸ் வேளாண் தொழில் நிறுவனத்திற்காகவும், 2018ஆம் ஆண்டை தேசிய கம்புகள் ஆண்டாக இந்திய அரசு அங்கீகரித்துள்ளது. முன்னதாக 2018ஆம் ஆண்டை “சர்வதேச கம்புகள் ஆண்டாக” அறிவிக்க வேண்டும் என்று கேட்டு 2017ஆம் ஆண்டில் இந்தியா ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு ஒரு கருத்துருவை அனுப்பியிருந்தது.

இந்திய சர்வதேச சந்தை (India International Exchange) அமைப்பு இந்திய இரயில்வே நிதிக் கழகத்தின் (Indian Railway Finance Corporation) பசுமைப் பத்திரங்களை, உலகளாவிய பங்குகள் சந்தை (Global Securities Market) என்ற தன்னுடைய கடன் பட்டியல் தளத்தில் பட்டியலிட்டுள்ளது.

ஜெர்மனியின் முன்னணி கார் தயாரிப்பு நிறுவனமாகிய மெர்சிடிஸ் பென்ஸ் இந்தியாவின் முதலாவது பிஎஸ்-6 இணக்க எஸ் வகை காரை அதனுடைய புனே தொழிற்சாலையில் உற்பத்தி செய்துள்ளது. இந்த பிஎஸ்-6 இணக்க எஸ் வகை கார் ஆனது ஏப்ரல் 2020ல் பிஎஸ் 6 இணக்க மாசு கட்டுப்பாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட வேண்டும், என்ற அரசின் கால நிர்ணயத்திற்கு இரண்டு ஆண்டுகள் முன்னதாகவே தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், 112 விதிவிலக்கான பெண் சாதனையாளர்களை புது டெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் கௌரவித்தார். “முதல் பெண்கள்” என்று அழைக்கப்படும் இந்தப் பெண் சாதனையாளர்கள் தத்தமது துறைகளில் புதிய மைல் கற்களைத் தொட்ட முதல் பெண்மணிகள் ஆவர்.

ஆதார் வழங்கும் ஆணையமாகிய, இந்திய தனிப்பட்ட அடையாள ஆணையம் இன்னொரு அங்கீகார வழியாக ஜூலை 1, 2018 முதல் முகம் அடையாளத்தை இயலச் செய்வது என்று முடிவு செய்துள்ளது.

9 புதிய செம்மை நகரங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது - தமிழ்நாட்டின் ஈரோடு அந்த நகரங்களில் ஒன்றாக இடம் பிடித்துள்ளது.

2018ல் இந்தியப் பொருளாதாரம் 7.4 விழுக்காடு உயரும்: சர்வதேச நாணய நிதியம்.

8வது தேசிய வாக்காளர்கள் தினம் 25 ஜனவரி அன்று அனுசரிக்கப்பட்டது. இந்த ஆண்டு, தேசிய வாக்காளர்கள் தினத்தின் மையக் கருத்து “அணுகக்கூடிய தேர்தல்கள்” என்பதாகும்.

உலகின் மிகப்பெரிய காற்று தூய்மையாக்கி - சீன அரசு, 100 மீட்டர் உயரமுள்ள, கிட்டத்தட்ட 328 அடி உயரம் உயரம் உள்ள உலகின் மிகப்பெரியது என்று போற்றத்தக்க காற்று தூய்மையாக்கியை, நாட்டில் மிகவும் மோசமாக நிலவும் காற்று மாசுபாட்டை எதிர்கொள்வதற்காக வட சீனாவின் ஷான்ஷி மாகாணத்தின் சியானில் கட்டியுள்ளது.

அகமதாபாத் நகருக்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள ஐகிரியேட் (**iCREATE**) என்ற ஒரு வசதியை பிரதமர் மோடியும் இஸ்ரேலிய பிரதமர் நெடன்யாகுவும் நாட்டுக்கு அர்ப்பணித்தனர். ஐகிரியேட் என்பது தொழில்முனைவோருக்கு வசதி செய்து தரும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட ஒரு சுதந்திரமான மையம் ஆகும். இந்தியாவில் தரமான தொழில் முனைவோரை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற ஒரு சுற்றுச் சூழலை உருவாக்கும் நோக்கத்திலேயே ஐகிரியேட் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் மிகவும் மதிப்பு மிக்க கடன் வழங்கும் நிறுவனமாகிய எச்டிஎப்சி வங்கி லிட் 5 டிரில்லியன் ரூபாய்கள் என்ற சந்தை முதலீட்டை முதன்முறையாக தாண்டியுள்ளது. இதையடுத்து இந்த எல்லையை அடைந்த மூன்றாவது இந்திய நிறுவனம் என்ற பெயரை அது பெற்றுள்ளது.

மால்டாவில் உள்ள வெல்லாட்டா என்ற நகரம் ஐரோப்பிய கலாச்சார தலைநகரம் என்று அதிகாரபூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஓமியோபதி ஆராய்ச்சி நிறுவனம் - ஜெய்ப்பூரில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தில் (Central Research Institute) அமைக்கப்பட உள்ளது.

தாம்சன் ராய்டர்சின் உலக தொழில்நுட்பத் தலைவர்கள் 100 பட்டியலில் மைக்ரோசாப்ட் நிறுவனம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

2016-17ல் இந்தியாவிற்கு மிக அதிக அன்னிய நேரடி முதலீட்டை வழங்கிய நாடு மொரீசியஸ்: இந்திய ரிசர்வ் வங்கி.

பார்வையற்றோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட்: இந்தியா பாகிஸ்தானைத் தோற்கடித்து பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இந்தப் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்றன.

“இதயம் நிறைவதற்கான வழி ('The HeartfulnessWay)” என்ற புத்தகத்தை எழுதியவர் - கம்லேஷ் படேல்.

**<u>69வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்</u>**

- 1950ல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த தினத்தைப் போற்றும் விதமாக இந்தியாவில் குடியரசு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 அன்று கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டு குடியரசு தினக் கொண்டாட்டங்களில் 10 நாடுகளின் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். அந்த நாடுகள் தாய்லாந்து, வியட்நாம், இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், மியான்மார், கம்போடியா, லாவோஸ் மற்றும் புருணை.

- மேலும் இந்த ஆண்டு முதன் முறையாக எல்லைப் பாதுகாப்புப் படையில் புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்து பெண்கள் பைக் சாகச நிகழ்ச்சி குடியரசு தினத்தன்று ராஜ்பட்டில் தன்னுடைய சாகசத்தை நிகழ்த்திக் காட்டியது.
- எல்லைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 27 உறுப்பினர்களைக் கொண்ட "சீமா பவானி" என்று பெயரிடப்பட்ட டேர்டெவில் படைப்பிரிவு தனது வீரசாகசங்கள் மற்றும் உடற்பயிற்சித் திறன்களை தங்களது 350 சிசி ராயல் என்பீல்டு புல்லட் மோட்டார் சைக்கிளில் செய்து காட்டியது.

## குறியீடுகள்

உலகப் பொருளாதார மன்றம் (The World Economic Forum) தன்னுடைய உலகளாவிய உற்பத்திக் குறியீட்டில் (Global Manufacturing Index) மொத்தம் உள்ள 100 நாடுகளில் இந்தியாவை 30வது இடத்தில் தரவரிசைப்படுத்தியுள்ளது.

உலகப் பொருளாதார மன்றம் வெளியிட்டுள்ள உள்ளடங்கிய வளர்ச்சிக் குறியீட்டில் (Inclusive Development Index - 2018) வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளின் பட்டியலில் இந்திய 62வது இடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

2017ல் உலகளாவிய திறன் போட்டித் தன்மை (Global index of talent competitiveness) பட்டியலில் மொத்தம் உள்ள 118 நாடுகளில் இந்தியா 81வது இடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் செயல் திறன் அட்டவணை 2018ல் மொத்தம் உள்ள 180 நாடுகளில் இந்தியா 177 இடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

முதலீட்டுக்கான மிகவும் கவர்ச்சிகரமான ஐந்தாவது சந்தை இந்தியா: பிடபிள்யூசி சர்வே.

## நியமனங்கள்

ஓம் பிரகாஷ் ராவத் - 22வது தலைமைத் தேர்தல் ஆணையர்.

விஞ்ஞானி எஸ். சோமநாத் - விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநர்.

மூத்த விஞ்ஞானி டாக்டர். வி. நாராயணன் - இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் திரவ தள்ளுதல் முறைமைகள் மையம் (Liquid Propulsion Systems Centre) இன் இயக்குநர்.

உஷா அனந்தசுப்பிரமணியன் - இந்திய வங்கிகள் சங்கத்தின் (Indian Banks' Association) முதல் பெண் தலைவர்.

சுதீப் லக்தாகியா - தேசிய பாதுகாப்புப் படையின் (National Security Guard) முதல் தலைமை இயக்குநர்.

ஆனந்தி பென் படேல் - மத்தியப் பிரதேச ஆளுநர்.

மெஹை டயூடோஸ் - சமீபத்தில் பதவியை ராஜினாமா செய்து ரோமானியப் பிரதமர்.

வயோரிகா டான்சிலா - ரோமானியாவின் முதலாவது பெண் பிரதமர்.

**மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்**

- முதலாவது சர்வதேச அணை பாதுகாப்பு மாநாடு - திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. அணை சுகாதாரம் மற்றும் மறுவாழ்வு கண்காணிப்பு செயலி (Dam Health and Rehabilitation Monitoring Application) என்ற ஒரு மென்பொருள் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மென்பொருள் நாட்டில் உள்ள பெரிய அணைகள் தொடர்பான அதிகாரபூர்வ சொத்து மற்றும் சுகாதார தகவல்களை ஆவணப்படுத்தும்.

- இஸ்ரேல் பிரதமர் ரெய்சினா பேச்சு வார்த்தையை புது டெல்லியில் தொடங்கி வைத்தார். இந்த ரெய்சினா பேச்சு வார்த்தையானது இந்தியாவின் முன்னணி வெளியுறவுக் கொள்கை மற்றும் புவி அரசியல் மாநாடு ஆகும். இந்த ரெய்சினா பேச்சு வார்த்தையின்போது பேசிய முதலாவது அயல்நாட்டுத் தலைவர் பிரதமர் நெடன்யாஹுவே ஆகும். இந்த ஆண்டு ரெய்சினா பேச்சு வார்த்தைக்கான மையக் கருத்து, “சீர்குலைக்கும் மாற்றங்களை நிர்வகித்தல்: கருத்துக்கள், நிறுவனங்கள் மற்றும் முதுமொழிகள்” ஆகும்.

- உணவு மற்றும் வேளாண்மைக்கான 10வது உலகளாவிய மன்றம் - பெர்லின், ஜெர்மனி. இந்த ஆண்டு நிகழ்ச்சிக்கான மையக் கருத்து, “கால்நடைகளின் எதிர்காலத்தை வடிவமைத்தல் - நிலையாக, பொறுமையாக, திறமையாக”.

- பாதுகாப்புக் கண்காட்சி ஏப்ரலில் - பாதுகாப்பு தொடர்பான சர்வதேச கண்காட்சியாகிய பாதுகாப்பு கண்காட்சி 2018ஐ (DefExpo 2018) தமிழ்நாடு முதன் முறையாக நடத்த உள்ளது. இந்தக் கண்காட்சியின்போது சமீபத்திய தொழில்நுட்பங்கள் மற்றும் இந்தியா மற்றும் அயல் நாடுகளால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்படும்.

- கச்ரா மகோத்சவ் - சத்தீஷ்கர் மாநிலத்தில் உள்ள ராய்ப்பூர் மாநகராட்சி இந்தியாவின் முதலாவது குப்பை திருவிழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளது. இந்தத் திருவிழாவின் நோக்கம் விழிப்புணர்வை அதிகரித்தல், நகரத்தில் உற்பத்தியாகும் கழிவுகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் மற்றும் குப்பை என்று அடையாளமிடப்பட்ட பொருட்களை மீண்டும் பயன்படுத்திக் கொள்வதற்கு பல்வேறு தொழில் நுட்பங்களைக் காண்பித்தல் ஆகியவையே.

- பேரழிவு நெகிழ்ச்சி கட்டமைப்பு பற்றிய சர்வதேச பட்டறை புது டெல்லியில் நடைபெற்றது.

**விருதுகளும் கௌரவங்களும்**

ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் முதலமைச்சரின் கலைஞர்கள் ஆதரவுத் திட்டம் (Mukhya Mantri Kalakar Sahayata Yojana) ஒன்றை ஒடிசாவில் உள்ள கலைஞர்களின் நலன்களுக்காக தொடங்கி வைத்தார்.

“வீரத்திற்கான பதக்கம்” - அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், பாகிஸ்தானுக்கு எதிராக சமீபத்தில் எடுத்த நிலைப்பாட்டைப் பாராட்டி, ஆப்கானிஸ்தானின் லோகார் மாகாணத்தில் வசிக்கும் மக்கள் அவருக்கு “வீரத்திற்கான பதக்கத்தை வழங்கினர்”.

ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் அவர்களுக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் “உதாரண முதலமைச்சர்” என்ற விருதை புனேயின் இந்திய மாணவர் பாராளுமன்றம் (Bharatiya Chhatra Sansad) நிகழ்ச்சியில் வழங்கினார்.

புகழ்பெற்ற திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதஸ்வாமி திருக்கோயிலுக்காக வழங்கப்பட்ட யுனெஸ்கோ தகுதி விருதை (Award of Merit) தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிச்சாமி பெற்றார்.

ஒடிசாவில் உள்ள மங்களஜோடி சுற்றுச் சூழல் சுற்றுலா அறக்கட்டளை, சுற்றுலாத் தொழிலில் புதுமையைப் புகுத்தியமைக்காக ஐக்கிய நாடுகள் உலக

சுற்றுலா அமைப்பின் (United Nations World Tourism Organisation) விருதை ஸ்பெயினின் மெட்ரிட் நகரில் நடைபெற்ற 14வது ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியில் வென்றது.

**சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) விருதுகள் 2018: வெற்றியாளர்களின் முழு பட்டியல்**

- இந்த ஆண்டு சிறந்த ஐசிசி கிரிக்கெட் வீரருக்கான சர் கார்.ஃ.பீல்டு சாபர்ஸ் கோப்பை - விராட் கோலி (இந்தியா)
- இந்த ஆண்டின் சிறந்த ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் வீரர் - ஸ்டீவ் ஸ்மித் (ஆஸ்திரேலியா)
- இந்த ஆண்டின் சிறந்த ஐசிசி எம் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வீரர் - விராட் கோலி (இந்தியா)
- இந்த ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் ஐசிசி கிரிக்கெட் வீரர் - ஹாசன் அலி (பாகிஸ்தான்)
- இந்த ஆண்டின் சிறந்த ஐசிசி இணை கிரிக்கெட் வீரர் - ரஷித் கான் (ஆப்கானிஸ்தான்)
- இந்த ஆண்டின் சிறந்த ஐசிசி டி20 செயல் வீரர் - யுஸ்வேந்திரா சாஹல் (6-25 இந்தியாவுக்காக இங்கிலாந்தை எதிர்த்து விளையாடிய வீரர்)
- இந்த ஆண்டின் சிறந்த ஐசிசி நடுவருக்கான டேவிட் ஷெப்பர்டு கோப்பை - மரைஸ் எராஸ்மஸ்
- ஐசிசி கிரிக்கெட்டின் அடிப்படை - அன்யா ஷ்ரப்சோல் (இங்கிலாந்து)
- இந்த ஆண்டின் சிறந்த ஐசிசி ரசிகர்கள் தருணம் - ஐசிசி சாம்பியன்ஸ் கோப்பை 2017 வெற்றி பெறுவதற்காக பாகிஸ்தான் இந்தியாவை தோற்கடித்து அதிர்ச்சி அளித்த தருணம்.
- இந்த ஆண்டிற்கான டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒரு நாள் போட்டிகளுக்கான குழுக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்த இரண்டு அணிகளிலம் விராட் கோலியே தலைவராக இருப்பார்.

**பத்ம விருதுகள்**

85 பேருக்கு பத்ம விருதுகள் வழங்குவதை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வியாழக்கிழமை அங்கீகரித்தார். அவற்றுள் மூன்று பத்மவிபூஷன், ஒன்பது பத்மபூஷன் மற்றும் 73 பத்மஸ்ரீ விருதுகள் அடங்கும்.

**தமிழ்நாடு**

- இசைப் பேரறிஞர் மேஸ்ட்ரோ இளையராஜா அவர்களுக்கு **பத்ம விபூஷன்** விருது வழங்கப்பட்டது.

- **பத்மபூஷன்:** தமிழ்நாடு தொல்லியல் துறை இயக்குநராக சேவை செய்த பன்முகத் தன்மை கொண்டவராகிய, பத்மபூசன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள திரு. ராமச்சந்திரன் நாகஸ்வாமி, பல்வேறு மண்டல, மாவட்ட மற்றும் தள அருங்காட்சியகங்களையும் புகழ்பெற்ற சிதம்பரம் நாட்டியாஞ்சலி திருவிழாவையும் ஏற்பாடு செய்ததில் முக்கிய பங்காற்றியவர்.

**பத்மஸ்ரீ**

- நாட்டின் மிகவும் முதுமையான யோகா ஆசிரியர்களில் ஒருவராகக் கருதப்படும் கோவையைச் சேர்ந்த வி. நாணம்மாள், பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

- மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் முதல்வரும் அவரது நகரத்தைச் சார்ந்த மக்களால் "இந்தியாவின் பிளாஸ்டிக் மனிதர்" என்று பெருமையாக அழைக்கப்படுபவருமாகிய ஆர். வாசுதேவன், பிளாஸ்டிக் கழிவுகளை சாலைக் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தும் ஒரு தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளார்.

- சென்னை பாம்புப் பண்ணையைத் தோற்றுவித்தவரும், சென்னை முதலை வங்கி அறகுக்கட்டளையைத் தோற்றுவித்தவருமாகிய ரோமுலஸ் வைட்டேக்கர் (Romulus Whitaker), வனவிலங்குகளைக் காப்பதற்காக அவர் மேற்கொண்ட சேவைகளைப் பாராட்டி பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

- புகழ்பெற்ற தமிழ் நாட்டுப்புறக் கலைஞராகிய விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன், தமிழ் நாட்டுப் புறக் கலைகள் மற்றும் பழங்குடியினர் பாடல்களைச் சேகரித்தது, ஆவணப்படுத்தியது மற்றும் பாதுகாத்தமைக்காக பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து 2018 |
|---|---|---|
| 4 ஜனவரி | உலக பிரெய்லி தினம் | |
| 10 ஜனவரி | உலக இந்தி தினம் | |
| 12 ஜனவரி | தேசிய இளைஞர் தினம் | |
| 15 ஜனவரி | இந்திய இராணுவ தினம் | |
| 24 ஜனவரி | தேசிய பெண் குழந்தை தினம் | |
| 25 ஜனவரி | தேசிய வாக்காளர்கள் தினம் | மையக் கருத்து: எளிதில் அணுகுவதற்கான தேர்தல்கள் |
| 26 ஜனவரி | குடியரசு தினம் | |
| 26 ஜனவரி | சர்வதேச சுங்க தினம் | |
| 27 ஜனவரி | சர்வதேச பேரழிவு நினைவு தினம் | மையக் கருத்து: பேரழிவு நினைவு மற்றும் கல்வி: நமது கூட்டு பொறுப்பு |
| 28 ஜனவரி | உலக தொழுநோய் தினம் | |
| 30 ஜனவரி | தியாகிகள் தினம் | |
| 31 ஜனவரி | தேசிய பேரிடர் மீட்புப் படை (National Disaster Response Force) தோற்றுவிக்கப்பட்ட தினம் | |


PH: 24339436, 42867555, 9840226187

**தமிழகஅரசின் 2017 – 2018-ஆம் ஆண்டிற்கான இலக்கிய விருதுகள்:**

**விருது பெறுவோர் பட்டியல்:**

1. திருவள்ளுவர் விருது (2018) –முனைவர் கோ. பெரியண்ணன், தலைவர், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கம்.

2. தந்தை பெரியார் விருது – பா. வளர்மதி, தலைவர், தமிழ்நாடுபாடநூல் கழகம்

3. அண்ணல் அம்பேத்கர் விருது – டாக்டர் ஜார்ஜ் கே.ஜே. முன்னாள் இயக்குநர், மான்.ஃ.போர்ட் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி.

4. பேரறிஞர் அண்ணாவிருது – அ. சுப்பிரமணியன், முன்னாள் செயலாளர் ராமநாதபுரம் மாவட்ட அண்ணா தொழிற்சங்கம்.

5. பெருந்தலைவர் காமராஜர் விருது – தா.ரா. தினகரன், அருப்புக்கோட்டை ஸ்ரீ ராமலிங்கா மில்ஸ், ஜெயவிலாஸ் குழுமத்தின் தலைவர்.

6. மகாகவி பாரதியார் விருது – முனைவர் சு. பாலசுப்பிரமணியன் (எ) பாரதிபாலன், தமிழியல் துறைத் தலைவர், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழகம்.

7. பாவேந்தர் பாரதிதாசன் விருது – கே. ஜீவபாரதி, எழுத்தாளர் - கவிஞர்

8. தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது – எழுத்தாளர் பாலகுமாரன்.

9. கி.ஆ.பெ. விசுவநாதம் விருது – தமிழறிஞர் மருதநாயகம்.

# ஜனவரி 26 - 31

## <u>இந்தியா</u>

### ஸ்ரீ ஸ்வாபிமான் முயற்சித் திட்டம் (Stree Swabhiman Initiative)

- இந்தத் திட்டத்தின்கீழ், பொது சேவை மையங்கள் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் வளரிளம்பருவ பெண்கள் மற்றும் மகளிருக்கு விலை குறைவான, நம்பகமான மற்றும் நவீன (சுற்றுச்சூழல் நட்பு) துப்புறவு நாப்கின்களை கிடைக்கச் செய்யும்.

- மாதவிலக்கு சுகாதாரம் மற்றும் பெண்களின் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்வதே இதன் நோக்கம் ஆகும். இவ்வாறாக இது பெண்களின் கௌரவம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்க உதவி செய்யும்.
- இந்தத் திட்டத்தின்கீழ், மலிவான மற்றும் சுற்றுச் சூழல் நட்பு துப்புரவு நாப்கின்களை உற்பத்தி செய்வதற்காக பகுதி தானியங்கி மற்றும் கையினால் இயக்கக்கூடிய துப்புரவு நாப்கின் உற்பத்தி அலகுகள் பொது சேவை மையங்களில் அமைக்கப்படும். இந்த நுண் உற்பத்தி அலகுகள் பெண் தொழில் முனைவோரால் செயல்படுத்தப்படுவதுடன் 8 முதல் 10 பெண்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்கும்.

## கெலோ இந்தியா பள்ளி விளையாட்டுகள்

- கெலோ இந்தியா திட்டத்தின்கீழ் தொடங்கி வைக்கப்பட்டது.
- இது ஜனவரி 31 முதல் பிப்ரவரி 8, 2018 வரை டெல்லி முழுவதும் பல்வேறு மையங்களில் நடைபெற்றது.
- இது 16 வகை விளையாட்டுப் பிரிவுகளை உள்ளடக்கியதாக இருந்தது.
- இளம் விளையாட்டு வீரர்களிடம் மறைந்துள்ள திறமைகளை வெளிக் கொணர்வதற்கு ஒரு மேடையை உருவாக்குவதற்காகவும், இளைஞர்களிடையே உடல் தகுதி மற்றும் நல்ல உடல் நலத்தைப் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் உருவாக்க வேண்டும் என்பதையும் நோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகிறது.

## கெலோ இந்தியா திட்டம்

- நாட்டில் உள்ளடங்கிய மற்றும் முழுமையான விளையாட்டுச் சுற்றுச் சூழலைக் கட்டமைப்பதற்காக 2016ல் தொடங்கி வைக்கப்பட்டது.
- இது, இளைஞர்களிடம் அவர்களின் வாழ்க்கையின் ஆரம்ப நிலையிலேயே தங்களது அன்றாட வாழ்க்கையில் விளையாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முன்னதாக மூன்று மாறுபட்ட திட்டங்களாக விளங்கியவற்றை ஒருங்கிணைத்து இந்தப் புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த மூன்று திட்டங்களாவன: ராஜீவ் காந்தி கேல் அபியான் (*Rajiv Gandhi KhelAbhiyan*), தேசிய விளையாட்டு திறன் ஆராய்ச்சித் திட்டம் (*National Sports Talent Search Scheme*) மற்றும் நகர்ப்புற விளையாட்டுக் கட்டமைப்புத் திட்டம் (*Urban Sports infrastructure Scheme*).

## மைத்ரேயி யாத்ரா (MaitreyiYatra)

- ஜம்மு காஷ்மீர் மாணவர் பரிமாற்றத் திட்டம்.
- மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது, ஜம்மு காஷ்மீர் மாநில இளைஞர்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளின் கலாச்சாரம், மொழி மற்றும் வளர்ச்சிக் கதைகளை அறிந்து கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்.

## ஜோஜிலா சுரங்கப்பாதை (Zojila Tunnel)

- ஜம்மு மற்றும் காஷ்மீரில் கட்டப்பட உள்ளது.
- இது இந்தியாவின் மிக நீளமான சாலை வழி சுரங்கப் பாதையாகும். அத்துடன் ஆசியாவின் மிக நீளமான இருவழி சுரங்கப் பாதையுமாகும்.
- இந்தச் சுரங்கப் பாதையைக் கட்டுவதால், அது ஸ்ரீநகர், கார்கில் மற்றும் லே நகரங்களுக்கு இடையே அனைத்து காலநிலைகளுக்கும் உகந்த இணைப்பை ஏற்படுத்தித் தரும். அத்துடன் இந்தப் பிராந்தியங்களுக்கு இடையே ஒட்டு மொத்த பொருளாதார மற்றும் சமூக கலாச்சார ஒருங்கிணைப்பையும் இது ஏற்படுத்தும்.

## மகாத்மா காந்தி சர்பத் விகாஸ் யோஜனா

- பஞ்சாப் மாநிலம் முழுவதிலும் உள்ள அடித்தட்டு குடிமக்களின் நலன்களுக்காக பஞ்சாப் அரசினால் தொடங்கி வைக்கப்பட்டது.
- சமூகத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினரின் உள்ளடங்கிய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- இந்தத் திட்டம் அந்தியோதயாவின் கொள்கைகளுக்கு (அந்தியோதயா என்பது கடைசி நபரின் எழுச்சி என்று பொருள்படும்) இணங்கவே செயல்படுத்தப்படும். இது மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

## வளரிளம் பருவ பெண்களுக்கான திட்டம்

- இந்தத் திட்டம் வளரிளம் பருவ பெண்களுக்கு ஊட்டச் சத்து ஆதரவு, பள்ளியில் இடைநின்ற பெண்களுக்கு ஊக்கம் கொடுத்து அவர்களை மீண்டும் முறையான பள்ளிக்கு அனுப்புதல் அல்லது ஊட்டச்சத்து இல்லாத பொருளின்கீழ் திறன் வளர்ப்பு பயிற்சிக்கு அனுப்புதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இது பெண்களுக்கு ஊட்டச் சத்தை வழங்குவதுடன், சுகாதாரம், துப்புரவு மற்றும் நடப்பு பொது சேவைகள் குறித்த வழிகாட்டுதல் போன்ற தகவல்களையும் அவர்களுக்கு வழங்குகிறது.

- மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சகம், விரைவான அறிக்கை அமைப்பின் (**Rapid Reporting System**) பயணர் தொகுதி என்ற வலைத் தளம் அடிப்படையிலான, வளரிளம் பெண்களைக் கண்காணிப்பதற்கான ஆன்லைன் போர்ட்டல் திட்டம் ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளது.

**அரசு மின் சந்தை இடம் (Government e-Marketplace)**

- அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் முகமைகள் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்முதல் செய்வதற்கான ஒரு ஆன்லைன் சந்தை மேடையே அரசு மின் சந்தை இடம் (GeM) ஆகும். இது இந்திய அரசின் தேசிய கொள்முதல் போர்ட்டல் என்று கருதப்படுகிறது.
- மத்திய வணிகம் மற்றும் தொழில் அமைச்சகம் அரசு மின் சந்தை இடத்தின் மூன்றாவது பதிப்பைத் (**GeM 3.0**) தொடங்கி வைத்துள்ளது.

**பிரதமரின் கிராம திட்டமிடல் திட்டம் (Pradhan Mantri Gram SadakYojana)**

- தகுதியுள்ள அனைத்து இணைக்கப்படாத ஊரக கிராமங்களுக்கும் (வாழ்விடங்களுக்கும்) அனைத்து காலநிலைகளுக்கும் ஏற்ற ஒற்றை சாலை இணைப்பை ஏற்படுத்தித் தருவதற்காக ஒரு மத்திய உதவித் திட்டமாக இது 2000 ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்டது.
- பிரதமரின் கிராம திட்டமிடல் திட்டத்தின்கீழ் அஸ்ஸாம், சத்தீஷ்கர், மத்தியப் பிரதேசம், ஒடிசா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 5 மாநிலங்களில் ஊரக சாலை இணைப்பை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 250 அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் அங்கன்வாடி சேவைகள் பயிற்சித் திட்டத்திற்காக மேலாண்மை தகவல் அமைப்பு (Management Information System) என்ற ஒரு போர்ட்டலைத் தொடங்கி வைத்துள்ளது.

சிறு நிதி வங்கிகள் மற்றும் பணக்கொடுப்பு வங்கிகள் அடல் ஓய்வூதியத் திட்ட பகிர்ந்தளிப்பை வழங்க ஏதுவாக மத்திய நிதி அமைச்சகம், அடல் ஓய்வூதியத் திட்டத்திற்கான விதிமுறைகளைத் தளர்த்தியுள்ளது. இந்த நடவடிக்கையின் காரணமாக இந்தத் திட்டத்தின் எல்லை விரிவடைய ஏதுவாகும் என்பதோடு, தற்போதுள்ள அடல் ஓய்வூதியத் திட்ட பகிர்ந்தளிப்பு அமைப்புகளை வலுப்படுத்தவும் செய்யும்.

மதியிறுக்கம், மன நோய், அறிவுத் திறன் குறைபாடு மற்றும் அமில வீச்சு தாக்குதலுக்கு உள்ளான நபர்கள் தற்போது மத்திய அரசுப் பணிகளில் இட ஒதுக்கீகட்டைப் பெற முடியும்.

2017ஆம் ஆண்டுக்கான சிறந்த இந்தி சொல் “ஆதார்” ஆகும். இது ஜெய்ப்பூர் இலக்கியத் திருவிழாவில் ஆக்ஸ்போர்டு அகராதி அமைப்பினால் அறிவிக்கப்பட்டது.

## குறியீடுகள்

உலக செல்வ வள நாடுகளில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது: புதிய உலக செல்வ வள அறிக்கை.
2017 உலக குடியரசு அட்டவணையில் இந்தியா 42வது இடத்தில் உள்ளது.

உலக திறன் போட்டித் தன்மை அட்டவணையில் இந்தியா 81வது இடத்தில் உள்ளது.

சுற்றுச் சூழல் செயல் திறன் அட்டவணையில் மொத்தம் உள்ள 180 நாடுகளில் இந்தியா 177வது இடத்தில் உள்ளது.

சமீபத்தில் 112 நாடுகளில் மேற்கொண்ட ஆய்வின்படி, வாழ்வதற்கோ அல்லது ஓய்வை அனுபவிப்பதற்கோ மிகவும் செலவினம் குறைவான நாடுகளின் பட்டியலில் தென் ஆப்பிரிக்காவை அடுத்து இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.

உலக தேங்காய் உற்பத்தியில் இந்தியா முன்னிலை வகிக்கிறது.

உலக எஃகு சங்கத்தினால் (World Steel Association) வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, 2017ல் உலக எஃகு உற்பத்தியில் அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி உலக அளவில் மூன்றாவது இடத்தை இந்தியா தக்க வைத்துக் கொண்டுள்ளது.

## இந்தியா மற்றும் உலகம்

தமிழ்நாட்டில் ஊரகப் பொருளாதாரத்தை ஊக்கவிக்கும் திட்டத்தை செயல்படுத்த ஏதுவாக, மத்திய அரசு உலக வங்கியுடன் 100 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தக் கடனானது மறுகட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடம் (International Bank for Reconstruction and Development) இருந்து பெறப்படுகிறது. இந்தக் கடனுக்கு

5 ஆண்டுகள் சலுகை காலம் உள்ளது. இந்தக் கடன் 19 ஆண்டுகளில் முதிர்வு பெறும்.

தகவல் ஒலிபரப்பு மற்றும் விண்வெளி ஒத்துழைப்பு துறைகளில் கூட்டுறவை மேம்படுத்தும் விதமாக இந்தியாவும் வியட்நாமும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

இந்தியாவும் லாவோ மக்கள் ஜனநாயக் குடியரசும் ஸ்கைரெவ் 360 என்ற (SkyRev360) ஒரு விரிவான மின் தரவு சேகரிப்பு, இன்வாய்சிங் மற்றும் சேகரிப்பு அமைப்பை வழங்குவதற்காக உள்நாட்டு விமான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

தார் இணைப்பு எக்ஸ்பிரஸ் என்ற, இந்தியா பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே செல்லும் இரண்டாவது தனி இரயில் சேவை அமைப்பை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு அதாவது 2021 வரை நீட்டிக்க வகை செய்யும் நீட்டிப்பு ஒப்பந்தத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் கையெழுத்திட்டுள்ளன.

**இந்தியா மற்றும் பாகிஸ்தான் இரயில் சேவை**

- இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களது இரண்டு நாடுகளின் எல்லை வழியாகச் செல்லும் இரண்டே இரண்டு இரயில்களைத் தற்போது கொண்டுள்ளன.
- அவை சம்ஜாத்தா விரைவு இரயில்: அட்டாரி - வாகா எல்லை வழியாகக் கடந்து டெல்லி லாகூர் பாதையில் செல்லும் இரயில். இது பயணிகளையும் சுமைகளையும் ஏற்றிச் செல்கிறது.
- தார் விரைவு இரயில்: இந்த இரயில் முனாபாவ் - கோக்ரப்பர் எல்லைகள் வழியாக ஜோத்பூர் (இந்தியா) மற்றும் கராச்சி (பாகிஸ்தான்) ஆகிய நகரங்களை இணைக்கிறது. இது பயணிகளை மட்டுமே ஏற்றிச் செல்கிறது.

## உலகம்

**உலகப் பொருளாதார மன்றம் (World Economic Forum)**

- உலகப் பொருளாதார மன்றம் என்பது ஜெனீவாவை அடிப்படையாகக் கொண்ட இலாப நோக்கம் இன்றி செயல்படும் அறக்கட்டளை ஆகும்.
- இந்த மன்றம் அரசு - பொது மக்கள் கூட்டாமைக்கான சர்வதேச அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- இது வணிகம், அரசியல், கல்வி மற்றும் சமூகத்தின் இதர தலைவர்களை ஈடுபடுத்தி உலக, பிராந்திய மற்றும் தொழில் நிரல்களை வடிவமைப்பதற்காக உலகின் நிலைமையை உயர்த்துவதற்கு உறுதிபூண்டுள்ளது.
- இந்த உலகப் பொருளாதார மன்றமானது, ஸ்விட்சர்லாந்தின் கிழக்கு ஆல்ப்ஸ் பிராந்தியத்தில் உள்ள தாவோஸ் என்ற ஒரு மலைப் பகுதி ஓய்வு இடத்தில் ஆண்டுதோறும் ஐந்து நாட்கள் நடைபெறும் குளிர்கால கூட்டத்தின் பொருட்டு அனைவராலும் நன்கு அறியப்பட்டுள்ளது.

பெருகி வரும் ஹேக்கர்கள் மற்றும் தரவுத் திருடர்களிடமிருந்து உலகத்தைப் பாதுகாப்பதற்காக இந்த உலகப் பொருளாதார மன்றம் இணையப் பாதுகாப்புக்கான புதிய உலக மையத்தைத் (Global Centre for Cybersecurity) தொடங்கி வைத்துள்ளது. இந்த மையத்தின் தலைமையிடம் ஸ்விட்சர்லாந்தின் ஜெனீவாவில் இருக்கும். இது மார்ச் 2018 முதல் செயல்பாட்டுக்கு வரும்.

இணையப் பாதுகாப்புக்கான உலக மையம் - இணையப் பாதுகாப்புக்கான உலக மையம் உலகப் பொருளாதார மன்றத்தின்கீழ் தன்னாட்சி பெற்ற ஒரு அமைப்பாக செயல்படும். இது ஒரு பாதுகாப்பான உலக இணைய வெளியைக் கட்டமைப்பதற்கு உதவி செய்யும்.

ஆசியான் - இந்தியா நினைவு உச்சி மாநாட்டின்போது, தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு உறுப்பு நாடுகளில் ஊரக இணைப்பை மேம்படுத்துவதற்கு இந்தியா தன் விருப்பத்தைத் தெரிவித்துள்ளது.

- பிரதமர் நரேந்திர மோடி இவ்வாறு கூறினார், “ஊரக இணைப்பு குறித்த ஒரு முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்தியா தன் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இதன் வாயிலாக, கம்போடியா, லாவோ மக்கள் ஜனநாயக குடியரசு, மியன்மார் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் டிஜிட்டல் கிராமங்கள் உருவாகும்.”
- ஆசியான் நாடுகள் 2019ஆம் ஆண்டை ஆசியான் - இந்தியா சுற்றுலா ஆண்டாக அறிவிக்க வேண்டும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

இருபது ஆண்டுகளுக்கு முன்பாக டாலி செம்மறியாடுகளை உருவாக்கிய அதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, சீன விஞ்ஞானிகள் முதன்முறையாக ஒரே மாதிரியான இரண்டு நீண்ட வால் குரங்குகளை (ஜாங் ஜாங் மற்றும் ஹுவா ஹுவா என்று பெயரிடப்பட்டுள்ளன) வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர். இந்த

முன்னேற்றமானது அந்தக் குரங்குகளை உலகின் முதலாவது உயர்இன குரங்குகளாக உருவாக்கியுள்ளது. நீண்ட வால் கொண்ட ஒரே மாதிரியான இந்த இரண்டு குரங்குகளும் சொமாட்டிக் செல் அணு பரிமாற்றம் (*somatic cell nuclear transfer*) என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குளோனிங் செய்து உருவாக்கப்பட்டன.

### ரோட்டாவாக் (Rotavac)

- உலக சுகாதார நிறுவனத்தால் முன் தகுதி பெற்ற இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட முதலாவது இந்திய தடுப்பூசி மருந்து.
- இதன்படி, இந்த மருந்தை சர்வதேச அளவில் தென் அமெரிக்கா மற்றும் ஆப்பிரிக்காவில் உள்ள பல்வேறு நாடுகளுக்கு விற்பனை செய்ய முடியும்.
- இதுவரை, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பல்வேறு தடுப்பூசி மருந்துகள் உலக சுகாதார நிறவனத்தால் முன் தகுதியைப் பெற்றுள்ளன. இருப்பினும் இந்த ரோட்டாவாக் தடுப்பூசி மருந்துதான் முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட, பாதுகாப்பு மற்றும் செயல்திறனில் இந்தத் தகுதியைப் பெற்ற முதல் மருந்து ஆகும்.

### மிஹிர் (Mihir)

மத்திய புவி அறிவியல் அமைச்சகம் உயர் செயல் திறன் கொண்ட கணினி அமைப்பு அல்லது மிஹிர் (சூரியன் என்று பொருள்படும்) எனப்படும் சூப்பர் கணினியை நொய்டாவில் உள்ள தேசிய நடுத்தர காலநிலை முன்னறிவிப்பு மையத்தில் (National Centre for Medium Range Weather Forecasting) தொடங்கி வைத்துள்ளது.

**பிரத்யூஷ் (Pratyush)** - புனேயின் வெப்ப மண்டல வானிலை ஆய்வு மையத்தில் (Indian Institute of Tropical Meteorology) வைக்கப்பட்டுள்ள இதுவும் ஒரு சூப்பர் கணினிதான்.

## மாநிலங்கள்

மின் விநியோக துறை சந்தித்தது வரும் சிக்கல்களை தீர்த்து வைப்பதற்காக, இந்தியா - ஜப்பான் ஸ்மார்ட் கிரிட் பைலட் திட்டம் ஹரியானாவின் பானிப்பட்டில் தொடங்கி வைக்கப்பட்டது.

மிதக்கும் சந்தையைக் கொண்ட இந்தியாவின் முதலாவது மெட்ரோ நகரமாக கோல்கட்டா விளங்குகிறது. இந்த மிதவைச் சந்தையானது தென் கோல்கட்டாவில் உள்ள பட்டுலி என்ற இடத்தில் அமைந்துள்ளது.

கரிம வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக இமாசலப் பிரதேச அரசு பூஜ்ஜிய பட்ஜெட் இயற்கை வேளாண்மை (Zero Budget Natural Farming) திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

குடியா - இமாசலப் பிரதேச அரசின் வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் இயங்கும் உதவி மையம். கற்பழிப்பு மற்றும் கொலைக்கு உள்ளான கோத்கையைச் சேர்ந்த 16 வயதான பெண்ணில் பெயரால் செயல்படுத்தப்படுகிறது.

**ஷக்கி பட்டன் (Shakti Button) -** இமாசலப் பிரதேச அரசு கொண்டு வந்துள்ள, மாநிலத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக காவல்துறை கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப்படும் ஒரு கைப்பேசி செயலி.

## பாதுகாப்பு

**ஐஎன்எஸ் கரஞ் (INS Karanj)**

- ஸ்கார்ப்பீன் வகையைச் சேர்ந்த மூன்றாவது நீர்மூழ்கிக் கப்பல்.
- மகாராஷ்டிராவின் மும்பை நகரத்தில் உள்ள மாசகான் கப்பல் கட்டும் தளத்தில் (Mazagon Dock Shipbuilders Ltd) தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்திய கடற்படையின் பாரம்பரிய வழக்கப்படி, 1969 முதல் 2003 வரை பயன்பாட்டில் இருந்த பழைய நீர்மூழ்கிக் கப்பலின் பெயராலேயே ஐஎன்எஸ் கரஞ் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

**வின்பேக்ஸ் (VINBAX)**

- இந்தியா - வியட்நாம் இருதரப்பு இராணுவப் பயிற்சி.
- மத்தியப் பிரதேசத்தில் ஜபல்பூரில் நடைபெற்றது.
- இந்த இரண்டு நாடுகளுக்கு இடையே நடத்தப்படும் முதலாவது இராணுவப் பயிற்சி இதுவே ஆகும்.

## செய்திகளில் இடம்பிடித்த நபர்கள்

கர்நாடகாவைச் சேர்ந்த ஜீயர், சித்தேஸஷ்வர் ஸ்வாமி பத்மஸ்ரீ விருதைப் புறக்கணித்தார். பெருமைக்குரிய இந்த பத்மஸ்ரீ விருதை ஏற்றுக் கொள்ள தனக்கு விருப்பம் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

**நீலம் கபூர் - NeelamKapoor -** இந்திய விளையாட்டு ஆணையத்தின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**உஷா அனந்த சுப்பிரமணியன்** - இந்திய வங்கிகள் சங்கத்தின் முதலாவது பெண் தலைவர்.

**ஜெரோம் எச் பவல்** - அமெரிக்க ஃபெடரல் ரிசர்வின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவியானது உலகப் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு ஒரு வலிமையான பதவி ஆகும்.

**சந்தீப் லமிச்சேன் -** ஐபிஎல் ஒப்பந்தத்தைப் பெற்ற முதலாவது நேபாள வீரர்.

**ஷாலி நினிஸ்டோ (SauliNiinisto) -** ஃபின்லாந்தின் அதிபர்.

**டாக்டர் குர்சரன் சிங் கால்கட்** - இந்தியாவின் பசுமைப் புரட்சியின் முன்னோடி காலமானார்.

**சுனில் செட்ரியின்** பிறந்த தினம் டெல்லியின் கால்பந்து தினமாகக் கொண்டாடப்பட உள்ளது.

# விருதுகள்

**2018ஆம் ஆண்டு குடியரசு தின அணி வகுப்பு**

மாநில வாரியாக சிறந்த காட்சிப் படம்

- முதல் பரிசு: சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் முடிசூட்டு விழாவை தத்ரூபமாகக் காட்டிய மகாராஷ்டிரா காட்சிப் படத்திற்கு முதல் பரிசு வழங்கப்பட்டது.
- இரண்டாவது பரிசு: பாரம்பரிய அடையாளங்கள் மற்றும் சாஸ்திரங்களைப் பறைசாற்றிய அஸ்ஸாம் காட்சிப் படத்திற்கு இரண்டாம் பரிசு வழங்கப்பட்டது.
- மூன்றாம் பரிசு: காளிதாசரின் மேகதூதம் அடிப்படையிலான நாடகத்தை நடிகர்கள் நடத்திக் காட்டியதுடன் ராம்காரின் பண்டைய அரங்கத்தை நிகழ்த்திக் காட்டிய சத்தீஷ்கர் மாநில காட்சிப் படத்திற்கு மூன்றாம் பரிசு வழங்கப்பட்டது.

மத்திய அமைச்சகங்கள் / துறைகள் பிரிவு: 'கெலோ இந்தியா' வை சித்தரித்துக் காட்டிய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் காட்சிப் படத்திற்கு முதல் பரிசு வழங்கப்பட்டது.

மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் 2016ஆம் ஆண்டுக்கான பிரதமரின் ஷ்ரம் விருதுகளை அறிவித்துள்ளது. இது 50 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

**ஷ்ரம் விருதுகள்**

- இந்த விருதுகள் 1985ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இந்த விருதுகள் 500 அல்லது அதற்கும் அதிகமான தொழிலாளர்களை பணியில் அமர்த்தும் பொதுத் துறை நிறுவனங்கள் அல்லது மத்திய / மாநில அரசுகளின் சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.
- **நோக்கம்:** இது தொழிலாளர்களின் தனித்துவமான செயல்பாடு, புதுமையான திறன், உற்பத்திக்கு ஆற்றிய அளப்பறிய பங்களிப்பு மற்றும் அதீத தைரியத்தைக் காட்டுதல் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் ஆற்றிய சிறப்பான பணி ஆகியவற்றை அங்கீகரிக்கிறது.

**மிகச் சிறந்த பாராளுமன்ற உறுப்பினர் விருதுகள்**

டாக்டர் நஜ்மா ஹெப்துல்லா - 2013
ஹுகும்தேவ் நாராயண் யாதவ் - 2014
குலாம் நபி ஆசாத் - 2015
தினேஷ் திரிவேதி - 2016
பர்த்ருஹரி மஹாடேப் - 2017

**வினோத் பால் - உலக சுகாதார நிறுவனத்தின் இஷான் டோக்ராமசி குடும்ப நல அறக்கட்டளை பரிசைப் (IhsanDogramaci Family Health Foundation Prize) பெறும் முதல் இந்தியர்.**

**இஷான் டோக்ராமசி குடும்ப நல அறக்கட்டளை பரிசு**

இந்த இஷான் டோக்ராமசி குடும்ப நல அறக்கட்டளை பரிசானது, குடும்ப நலம் என்ற பிரிவின் கீழ் ஆற்றிய சேவையை அங்கீகரித்து வழங்கப்படும் உலக அளவிலான கௌரவம் ஆகும். இந்தப் பிரிவில் சிறப்பான சேவையை ஆற்றும் தனிநபர்களைப் பாராட்டி, குடும்ப நலத்தின் தரத்தை உயர்த்துவதற்காக 1980ஆம் ஆண்டு இந்த பரிசு தொடங்கி வைக்கப்பட்டது.

புகழ்பெற்ற திருச்சி, ஸ்ரீரங்கம் ரங்கநாதஸ்வாமி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்ட யுனெஸ்கோ பாரம்பரிய விருதை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி பெற்றுக் கொண்டார்.

இந்தியாவின் மிக உயரிய அமைதிக்கான இராணுவப் பரிசாகிய அசோக் சக்ரா விருது, இந்திய விமானப் படையின் தளபதி ஜோதி பிரகாஷ் மிராலாவுக்கு மரணத்திற்குப் பிந்தைய விருதாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆஷா போஸ்லே -** இந்தி திரைப்படத் தொழிலுக்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்புக்காக யஷ் சோப்ரா நினைவு விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மெஹுல் கார்க் (MehulGarg) -** இந்தியாவின் தோன்றிய இங்கிலாந்தில் வசிக்கும் இந்தச் சிறுவன் கடந்த பத்தாண்டுகளில் மென்சா அறிவுத் திறன் (Mensa IQ test) பரிசோதனையில் மிக அதிக மதிப்பெண்களைப் பெற்ற மிகவும் இளைய நபராகத் திகழ்கிறான். இவன் ஆல்பெர்ட் ஐன்ஸ்டீன் மற்றும் ஸ்டீபன் ஹாக்கிங் போன்ற மேதைகளையே தோற்கடித்துள்ளான்.
பிரான்சின் மிக உயரிய குடிமக்கள் விருதாகிய லிஜியன் டி ஹான்னர் (Legion d'Honneur), வங்காள நடிகர் சௌமித்ரா சாட்டர்ஜி-க்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆஷா போஸ்லே** - யாஷ் சோப்ரா நினைவு விருது.

1983ஆம் ஆண்டு உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கம் வென்ற பிரகாஷ் படுகோனேவுக்கு இந்திய பாட்மின்டன் சங்க வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுப் போட்டிகள்

**ஆஸ்திரேலிய ஓபன்** - இந்த ஆண்டு வெற்றி பெற்றவர்களின் பட்டியல்

- ஆடவர் ஒற்றையர்: ரோஜர் ∴பெடரர் (ஸ்விட்சர்லாந்து). அவர் குரோவேசியாவைச் சேர்ந்த மரின் சிலிக்கைத் தோற்கடித்தார்.
- மகளிர் ஒற்றையர்: கரோலின் வொஜ்னியகி (Caroline Wozniacki) (டென்மார்க்). அவர் சைமோனா ஹாலெப்பை (ரொமேனியா) தோற்கடித்தார்.
- ஆடவர் இரட்டையர்: ஓ. மராக் மற்றும் எம். பாவிக்
- மகளிர் இரட்டையர்: கே. மிளடெனோவிக் மற்றும் டி. பாபோஸ்
- கலப்பு இரட்டையர்: ஜி. டப்ரோவ்ஸ்கி மற்றும் எம். பாவிக்

நியூபோர்ட் கடற்கரையில் நடந்த போட்டிகளில் லியான்டர் பயஸ் 25வது சாலஞ்சர் இரட்டையர் பட்டத்தை வென்றார்.

**2018ஆம் ஆண்டுக்கான சையத் முஷ்டாக் அலி டி20 கோப்பையை டெல்லி அணி வெற்றி கொண்டது.**

# பல்வகை

ஆசியான் - இந்தியா ஆகிய அமைப்புகளுக்கு இடையே இருதரப்பு பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட்டதன் 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக, ஆசியான் - இந்தியா நினைவு உச்சி மாநாடு "பங்கிட்ட மதிப்புகள் மற்றும் பொதுவான இலக்கு" என்ற மையக் கருத்துடன் புது டெல்லியில் நடைபெற்றது. இது டெல்லி பிரகடனம் என்ற ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டது.

உலகப் பொருளாதார மன்ற உச்சி மாநாடு - தாவோஸ், ஸ்விட்சர்லாந்து.

21வது இந்திய சர்வதேச கடல் உணவுப் பொருட்கள் கண்காட்சி - கோவா

உலகின் முதலாவது "காடி ஹாட்" (KhadiHaat) - டெல்லி.

3வது சர்வதேச பறவைத் திருவிழா - துத்வா தேசிய பூங்கா (உத்தரப் பிரதேசம்)

சர்வதேச மசாலா மாநாடு - ஜெய்ப்பூர்

டில்லி மேரி டில்லி (Dilli Meri Dilli): 1998க்கு முன்பும் பின்பும் - ஷீலா தீக்ஷித் எழுதிய ஒரு புத்தகம்.

தேசிய தடுப்பூசி தினம் - 28 ஜனவரி.

**புத்தகங்கள்**

2ஜி சகா திறக்கிறது (2G Saga Unfolds) - ஏ. ராஜா

இதயபூர்வமான வழி (The Heartfulness Way) - கமலேஷ் படேல்.

இம்பர்ஃபெக்ட் - சஞ்சய் மஞ்ரேக்கரின் சுய சரிதை.

பூனை கதை - பி. ராகவன் அவர்களின் நாவல்.

APPOLO STUDY CENTRE
No.25, Nandhi Loop Street,
West C.I.T. Nagar, Chennai – 600 035
Near T.Nagar Bus Stand,
Landmark: Nandhi Statue
Ph: 24339436, 42867555, 9840226187
E-mail: appolotnpsc@gmail.com
Website: www.appolosupport.com
www.appolotraining.com

APPOLO STUDY CENTRE